# கொழும்புப் பெண்



பொ. சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூ. [illegible],
'புஷ்பராணி'
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பெண்

(நகைச்சுவைக் கட்டுரைகள்)

ந. சிவபாதம்
புத்தொளி
ஆனைக்கோட்டை

- பொ. சண்முகநாதன் -




புகையிரதநிலைய வீதி, : : சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: செப். 1965.

விலை ரூபா 1-50

அச்சுப்பதிவு:

சிவகுமரன் அச்சகம், : : அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

நிலையற்ற இவ்வுலக வாழ்வில் நம் அனைவருக்கும் ஏதாவது பிரச்னை, என்றாவது ஏற்படுவது இயல்பு. வாழ்க்கையின் இன்னல்கள் பற்றி சதா எண்ணி ஏங்குவதால் பயன் ஏதும் ஏற்படாது. சஞ்சலம் நிறைந்த வாழ்க்கையினூடே துன்பத்தை மறந்து இன்பமும் மன நிம்மதியும் காண முயல்வதுவே சிறந்த வழியாகும். இந்த இலக்கை அடைவதற்கு நகைச்சுவை என்னும் கலை இன்றியமையாததாகும்.

உள்ளத்திலேயோ உடலிலேயோ நிம்மதியின்றி கவலையினால் வாடும் ஒருவருக்கு நகைச்சுவை எழுத்துக்கள் சிறந்த மருந்தாக அமைகின்றன. சோர்வுற்று மனக்கவலை கொண்டுள்ள சமயங்களில் நகைச்சுவை எழுத்துக்கள் ஓர் புதிய தெம்பையும் மன உற்சாகத்தையும் படிப்பவர்களுக்குக் கொடுக்கவல்லவை. கவலைகளையெல்லாம் சிரித்துச் சிரித்து மறந்துவிடும் மனிதனுக்கு ஆயுள் கூட அதிகரிக்குமென்று வைத்தியர்கள் கூறுகின்றனர். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெந்த எழுத்திற்குமில்லாத தனிச் சக்தி நகைச்சுவை எழுத்திற்கு உண்டென்பதை எவராலும் மறக்கமுடியாது.

ஈழத்தில் நகைச்சுவை இலக்கியம் இதுவரை வளர்ச்சியடையாதது வருந்தத் தக்கதாகும். இலைமறைகாய் போலிருக்கும் ஒரு சில நகைச்சுவை எழுத்தாளர்கள் தமது எழுத்துக்களால் சமூகத்திற்கு அளப்பரிய சேவை செய்கிறார்களெனினும், அவர்களது திறமையை இன்னும் நம்நாட்டு மக்கள் பூரணமாகப்பயன் படுத்திக் கொள்ளவில்லையென்றுதான் கூறவேண்டியிருக்கிறது. எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் பத்திரிகைகளின் பணி மகத்தானதாகும்.

நகைச்சுவை எழுத்தில் முன்னணியில் திகழும் திரு. பொ. சண்முகநாதன் ஓர் முயற்சியுள்ள இளைஞர். தமது நகைச்சுவைக் கட்டுரைகளை தொகுப்பாக வெளியிடும் அவரது துணிச்சலை பாராட்டவே வேண்டும்.

'கொழும்புப்பெண்'ணை தத்ருபமாக வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் சண்முகநாதன் அவர்கள், உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இரண்டாவது கட்டுரையில் 'கொழும்புப் பெண் வேண்டாம்' என்று ஒரே மூச்சாக நிற்பதற்குக் காட்டும் காரணம், கொழும்புப் பெண்ணுக்கு 'தீனி' போட்டுக் கட்டாது என்பதுவே. சொல்லுக்குச் சொல் நகைச்சுவை ததும்பும் இவ்விரு கட்டுரைகளையும் படிக்கும் கொழும்புப் பெண்கள் புத்தகாசிரியரின் வாழ்வில் என்றுமே குறுக்கிட மாட்டார்களென்று இதுவரை பிரம்மச்சாரியான அவர் கூறுவதை நாமும் ஆமோதிப்போமாக.

'சிறுகதை எழுதுங்கள்' எனத் தூண்டும் கட்டுரையின் பிரகாரம் நீங்கள் சிறுகதையில் 'கைவைக்க' ஆரம்பித்தீர்களானால் சிறுகதை இலக்கியம் உருப்பட்டாற் போற்தான்! ஆனால் கட்டுரை ஆசிரியர் சுட்டிக்காட்டும் சிறுகதை எழுத்தாளர்கள் நம்மிடையே இல்லாமலில்லை. எழுத்தார்வம் உள்ளவர்களே தாராளமாகச் சிறுகதை எழுதுங்கள்; ஆனால் 'சிறுகதை எழுத்தாளர் எழில்'ஆக மட்டும் மாறி விடாதீர்கள்!

பொதுவாக நூலில் பிரசுரமாகியுள்ள ஏனைய கட்டுரைகளும் அன்றாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் நாம்சந்திக்கும் சர்வசாதாரண மான கதாபாத்திரங்களையே பின்னணி யாகக் கொண்டு திகழ்கின்றன. நம்மில் எத்தனை பேர் நாளாந்தம் 'நாக்கு வளைக் கும் நல்லம்மா'வுடனும், கடைகள் தோறும் 'சாம்பிள்' கேட்கும் கந்தருட னும், சோதிடவித்தகன் சொக்கலிங்கத் துடனும், சினிமாப் பித்தன் செல்வராச னுடனும் பழகிவருகின்றோம். எங் கெங்கு நாம் சென்றாலும் அங்கெல்லாம் இவ்வித பேர்வழிகளை நாம் காண்கிறோ மல்லவா?

ஈழத்தின் முதலாவது நகைச் சுவைக்கட்டுரைத் தொகுப்பு உங்கள் கைகளில் இருக்கிறது - அத்தோடு நம் நாட்டில் நகைச்சுவை இலக்கியத்தின் எதிர்காலமும் உங்கள் வசமே இருக் கின்றது. கவலைகளை மறந்து சிரியுங்கள்; சிந்தியுங்கள்.

**ரீ. பாக்கியநாயகம்**

அருணகிரி வீதி,
**மட்டக்களப்பு.**
22-9-1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பதற்கு முன்...

இந்த நாட்டில் சிறுகதை முதலியன எழுத ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதவோ ஒரு சிலர்தான் இருக்கிறார்கள். ஆனால் சிறுகதை முதலியன படிப்பவர்களுக்கு எந்த விதத்திலும் குறையாத கூட்டம் நகைச்சுவைக் கட்டுரைகளையும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அந்தக் கூட்டத்தின் தேவைகள் இங்கு நிறைவேற்றப்படுகிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இதனால்தான் நாற்பது சிறுகதைகளையோ கவிதைகளையோ எழுதியவனிலும் பார்க்க நாலு நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதியவனுக்கு 'மதிப்பு' அதிகமாக இருக்கிறது. இப்படிச் சொல்லுவதால் நான் நகைச்சுவைக் கட்டுரைகளுக்கு வக்காலத்து வாங்குகின்றேன் என்றோ ஏனைய இலக்கியத் துறைகளைத் தாழ்த்தப் புறப்பட்டு விட்டேன் என்றோ அன்பர்கள் யாரும் எண்ணிவிடக்கூடாது. அருமையாகக் கிடைப்பதற்கும் ஒருவித பெருமை இருக்கிறதல்லவா அதனையே இங்கு நான் குறிப்பிடுகின்றேன்.

இந்த 'நகைச்சுவை' தமிழுக்குப் புதியது என்றோ அது மேல் நாட்டிலிருந்துதான் தமிழுக்கு வந்தது என்றோ யாரும் சொல்லிவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலே முதன் முதலாகத் தோன்றிய நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலேயே நகைச் சுவைக்கு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் தமிழிலுள்ள புராண, இதிகாச, காவியங் களிலும் தனிப்பாடல்களிலும் நகைச்சுவைக்கு ஏற்ற இடமளித்துள்ளார்கள் நமது தமிழ்ப் புலவர்கள்.

நகைச்சுவை இலக்கியத்தை வெறும் 'பொழுது போக்கு' இலக்கியம் என்றுகூடச் சொல்வதற்கில்லை. அதனாலும் பல போதனைகளை யும் பிரசாரங்களையும் செய்யலாம். நல்ல பல கருத் துக்களை நாட்டிலே விதைக்கலாம். காளமேகப் புலவரது பாடல்களைப் படித்தயாரும் நகைச்சுவை இலக்கியத்தைப் 'பொழுது போக்கு' இலக்கியம் என்று சொல்லத் துணிய மாட்டார்கள். இதை விட உடலியல் உளவியல் அறிஞர்கள் பலர் சிரிப் பின் அவசியம் குறித்தும், அதன் சிறப்புக் குறித் தும் பலபடக் கூறியிருக்கிறார்கள். இப்படியான 'சிரிப்பை' உண்டாக்கவல்ல சிறப்பு வாய்ந்த நகைச்சுவை இலக்கியம் எப்படி வெறும் 'பொழுது போக்கு' இலக்கியமாகமுடியும்?

இத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் அனைத் தும் அவ்வப்போது **கலைச்செல்வி, தினகரன், ராதா, ஈழநாடு, வீரகேசரி, செய்தி** ஆகிய இதழ் களில் வெளியாகியவைகள். எனது கட்டுரைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு பிரசுரம் செய்து எனக்கு உற்சாகம் தந்தமைக்காகவும் இப்பொழுது அவைகளை இத்தொகுதியில் சேர்க்க அனுமதி தந்தமைக்காகவும் மேற்படி இதழ்களின் ஆசிரியர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

'கொழும்புப் பெண்'ணுக்கு அழகான மதிப்புரை வழங்கியுள்ள எனது மட்டுநகர் நண்பரும் பிரபல நகைச்சுவை எழுத்தாளரும் இத்துறையில் எனக்கு அடிக்கடி ஊக்கம் கொடுத்து வருபவருமான திரு. ரீ. பாக்கியநாயகம் -

நூல் வெளியீட்டுப் பொறுப்பைத் தாம் ஏற்று எனது சிரமங்களில் பலவற்றைக் குறைத்துதவிய கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி -

நூலை அழகாக அச்சிட்டுத் தந்த அச்சுவேலி சிவகுமரன் அச்சக ஊழியர்கள் -

நூல் வெளிவரப் பல வகையிலும் எனக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய எனதருமை இலக்கிய நண்பர் மு. கனகராசன் -

மற்றொரு நண்பரான மா. கந்தசாமி ஆகியோரெல்லாரும் எனது மதிப்புக்குரியவர்கள். இவர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றி என்றும் உண்டு.

சங்குவேலி தெற்கு, **போ. சண்முகநாதன்**
**மானிப்பாய்.** (இலங்கை)
26-9-1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


1. கொழும்புப் பெண் 9
2. கொழும்புப் பெண் வேண்டாம்! 15
3. சிறுகதை எழுதுங்கள்! 20
4. நாக்கு வளைக்கும் நல்லம்மா! 24
5. கந்தர் புராணம் 29
6. சோதிட வித்தகன் சொக்கலிங்கம்! 35
7. நாரதர் தூது! 39
8. சினிமாப் பித்தன் செல்வராசன்! 46
9. றிப்போட் தயாரிப்பது எப்படி? 59
10. காலத்துக்கேற்ற கோலம் போடும் [கந்தையர் 54
11. இலவச ஆலோசகர்கள்! 59
12. கடவுள் அவதாரம் கனகம்மா 64
13. அஞ்சல் செல்வனுடன் பேட்டி 69
14. எழுதாத எழுத்தாளன் எழிலன் 75
15. பாரதி இன்றிருந்தால்......! 80
16. நான் படித்துக் கிழித்த கதை 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பெண்.

மட்டக்களப்பான் யாழ்ப்பாணத்தான் மலை நாட்டான் எனச் சிலர் தமிழர்களை அரசியல் காரணங் களுக்கோ என்னவோ தெரியவில்லை வேறுபடுத்திச் சொல்வதுண்டு. அப்படிச் சொல்பவர்கள், யாரையா வது எனக்குக் காட்டி 'இவர் மட்டக்களப்பா? யாழ்ப் பாணமா? மலைநாடா? என்று கேட்டால் என்னல் பதில் சொல்ல முடியாது; வேறுபாடுகளைக் கண்டுபி டிக்க முடியாது. ஆனால் அவர்கள் யாரையாவது ஒரு பெண்ணைக் காட்டி 'இவர் கொழும்புப் பெண்ணு இல்லையா?' என்று கேட்டால் ஒரு வினடியில் பதில் சொல்லிவிடுவேன். இதில் என்னை ஒருவராலும் வெல்ல முடியாது!

இது எப்படி அவ்வளவு சுலபமாக எனக்குக் கைவர முடிகிறதென்று பலருக்கும் வியப்பாக இருக் கலாம். ஆனல் இதற்காக நான் கடந்த ஐந்து ஆண் டுகள் கொழும்பில் தங்கி அரிய ஆராட்சிகள் நடத்தி யது உங்களுக்கு எங்கே தெரியப்போகிறது! இதோ எனது ஆராய்ச்சியின் முடிவுகள்—

வேறு பகுதிகளிலுள்ள பெண்கள் தங்கள் இடையை இரண்டு அங்குலத்துக்கு மேல் காட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள். கொழும்புப் பெண்களாயிருந்தால் அவர்களது இடை மூன்று அங்குலத்திலிருந்து ஐந்து அங்குலம் வரை இருக்கும். அதுபோலவே அவர்களது கழுத்தும் சில கிராமப் பெண்களைப்போல் 'குறுக்குக்' கட்டியிருக்கிருர்களோ என எண்ணும்படியாக ஆடையின்றி வெறுமையாகக் காட்சியளிக்கும். ஆக இடுப்பிலிருந்து கழுத்துவரையுள்ள — மன்னிக்கவும் மார்புவரையுள்ள சட்டையின் உயரம் நாலு அங்குலத்திற்கும் குறைவாகவே கொழும்புப் பெண்களுக்கு இருக்கும் என்று சுருக்கமாகக் கூறலாம்.

இது ஒன்றே கொழும்புப் பெண்களைக் கண்டு பிடிக்கப் போதுமானதாயினும் எளிதில் கண்டுபிடிப்பதற்காக இன்னும் சில குறிப்புகளைத் தருகிறேன்.

பெண் ஒருத்தியின் மேலாடைக்கு அரை யார் துணி மிச்சம் மிச்சமாகப் போதுமென்ருலும், அவள் அணியும் சேலை விலையில் நூறு ரூபாவிற்கு மேலேயும் நிறையில் எட்டு அவுன்சுக்கு உள்ளேயும் இருந்தால் அவள் ஒரு கொழும்புப் பெண்ணே!

பெண் ஒருத்தி சேலைக்கடைக்குச் சென்று அங்கு 'திரௌபதை துகிலுரி படலம்' நடைபெற்றதோ என எண்ணும்படியாக கடையை மாற்றியமைத்துவிட்டு வெறுங்கையோடு வெளியேறி வேறு கடைக்குத் தாவி பின் முன்போலவே அங்கும் நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று...... இப்படியே நிகழ்ச்சி தொடர்கிறதென்றல் அந்தப் பெண்ணும் நிச்சயமாகக் கொழும்புப் பெண் என முடிவுகட்டி விடலாம். கொழும்புப் பெண்ணுக்கு ஒரு சேலை வாங்குவதென்றல் குறைந்தது மூன்று முழு நாட்கள் வேண்டும். அப்படியே ஒரு மூக்குத்தி வேண்டுமாயினும் முன்னூறு நகைக்கடைகளில் துப்பறியும் வேலை நடத்தவேண்டியிருக்கும்.

கண்ணுடிமுன் நிற்பதைக் கொண்டும் கொழும்புப் பெண்ணைக் கண்டறியலாம். தினமும் நான்கு மணித்தியாலத்திற்கு மேல் கண்ணுடிமுன் நின்று அலங்காரம் செய்பவளென்றல் அவளும் கொழும்புப் பெண்ணே! இதற்குமேலும் கண்ணுடிக்கு முன் நிற்கும் நேரம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அவளை அசல் பரம்பரைக் கொழும்புப் பெண் என்று சொல்லலாம்.

நித்திரைக்கு, உணவுக்கு, அலங்காரத்திற்குத் தவிர ஏனைய நேரங்களில் வீட்டிலே தங்காதவளாயும் அந்த நேரங்களிலெல்லாம் வீதிவலம் வருவதையும், துணிக்கடை நகைக்கடைகளுக்குத் தரிசனம் செய்வதையும் ஒரு பெண் தன் தவிர்க்கமுடியாத கடமைகளாகக் கொண்டவளாயிருந்தால் அவளும் ஒரு கொழும்புப் பெண்ணே!

பஸ் பிரயாணத்தின்போது வேறு இடங்கள் காலியாக இருந்தும் - பெண்கள் இருக்கும் சீட்டிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஒரு பெண்ணுக்கு இடம் இருந்தும்கூட பெண் ஒருத்தி பஸ்ஸில் ஏறி ஆணுக்குப் பக்கத்தில் இருந்தால் - அதுவும் நெருங்கி இருந்தால், அவள் கூட நிச்சயமாக ஒரு கொழும்புப் பெண்ணே!

ஒரு பெண் முகத்தில் எவ்வளவுதான் வியர்வை அரும்பினாலும் கைக்குட்டையால் முகம் துடைக்க மிகவும் தயங்குபவளாயும் பின் மிகுந்த தொல்லையுடன் மெதுவாகவும் கவனமாகவும் துடைக்கிறாள் என்றாலும் அவள் ஒரு கொழும்புப் பெண்ணே! (கொழும்புப் பெண்கள் அதிகமாகவும் கட்டாயமாகவும் ஏதோ சில மைகளைக் கண் புருவம் அதரம் ஆகியவைகளில் பூசுகிறார்களென்பதை இங்கு நினைவில் வைக்கவும்)

ஒருமுறை நான் ஒரு பெண்ணைக் கண்டு 'விழுந்து பல்லையும் உடைத்து கை விரல்களையும் காயப்படுத்தி விட்டாளே' என்று உதவி செய்யும் எண்ணத்துடன் அவளை அணுக முயன்றேன். அப்பொழுது எனது கொழும்பு நண்பர் என்னைத் தடுத்து 'அப்படி ஒன்றுமில்லை அவள் கொழும்புப் பெண்' என்றும் 'அவள் பல்லை உடைக்கவும் இல்லை. கை விரல்களைக் காயப்படுத்தவும் இல்லை. அவள் சொண்டுக்கும் நகங்களுக்கும் சிவப்பு மை பூசியிருக்கிறாள்' என்றும் சொன்னார். என்னைப் போல் உங்களுக்கும் பெண்களைக் காணும்போது இப்படியான எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டால் நீங்களும் அவர்கள் கொழும்புப் பெண்கள் என எண்ணிக்கொண்டு கவலையின்றி அப்பால் போகலாம்.

இவைகள் தவிர ஒரு பெண் மிகுந்த கவலையுடன் காணப்பட்டாலும் (இவ்வளவு பணம் செலவு செய்தும் ' இவ்வளவு நேரம் அலங்காரம் செய்தும் அழகு ! ஏற்படவில்லையே என்ற கவலை) தெருவில் விழுந்து எழுந்தாலும் ( இது குதி உயர்ந்த காலணியால் ஏற்படுவது ) அவளது பின்னல் கொண்டை முதலியன தெருவில் கழன்று விழுந்தாலும்கூட (அவைகள் செயற்கையானதால்) அவளும் ஒரு கொழும்புப் பெண் என்பதை முடிவு கட்டி விடலாம்.

எனது ஆராய்ச்சி முடிவுகள் இவ்வளவல்ல. இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவ்வளவையும் சொன்னால் பெண்களின் எந்த ஓர் அங்கத்தைப் பார்த்தாலுமோ அல்லது அவர்களது சிறு அசைவுகள் சிறு செய்கைகளைக் கண்டாலுமோ அவள் கொழும்புப் பெண்ணா இல்லையா என்பதை நீங்களும் என்னைப்போலவே நொடிப் பொழுதில் சொல்லி விடலாம்.

ஆனால் இப்பொழுது 'யாழ்தேவி' வரும் நேரமாகி விட்டது. யாரோ சில கொழும்புப் பெண்கள் எங்கள் வீட்டுக்கு வருகிறார்களாம். அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் இந்தக் கட்டுரை பட்டுவிட்டால் பல விபரீதங்கள் ஏற்படுவதுடன் உங்களுக்குக்கூட கட்டுரை கிடைக்காமல் போகலாம். எனவே இதோ கட்டுரையை முடித்துவிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பெண் வேண்டாம்!

முன்பு கொழும்புப் பெண்ணைப் பற்றி எழுதினேன் அல்லவா? அதனால் வந்த விபரீதங்கள், தொல்லைகள் அப்பப்பா!

"கொழும்புப் பெண்ணைப் பற்றியெல்லாம் இப்படி எழுதலாமா? இதைப் படித்தால் அல்லது படித்தவர்கள் சொல்லக் கேட்டால் எந்தக் கொழும்புப் பெண்ணும் உன்னை மணக்க முன்வர மாட்டாளே! நிச்சயமாகும்போல் இருக்கும் கொழும்புப் பெண்கூட இதை அறிந்தால் உன்னை எட்டியும் பார்க்க மாட்டாளே! எல்லாவற்றையும் கெடுத்துவிட்டாயே!" என்றெல்லாம் பெற்றோர்கள் மிகுந்த கவலையுடனும் கோபத்துடனும் என்மீது குறைப்படுகிறார்கள்; சீறிப்பாய்கிறார்கள்.

இதையெல்லாம் கேட்டதும் எனக்கு மிகுந்த ஆச்சரியமாகவும் இருந்தது; மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆச்சரியத்துக்குக் காரணம், கொழும்புப் பெண்ணைப்பற்றி இவ்வளவு எழுதியும், பெற்றோர்கள் கொழும்புப் பெண்கள்தான் என்னை வெறுப்பார்கள் என்று நினைக்கிறார்களே தவிர நான் கொழும்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணை வெறுப்பதைப் புரிந்துகொள்ள வில்லையே என்பதுதான்! ஒருவேளை எல்லாவற்றையும்போல் இதுவும் 'யாவுங் கற்பனை' என்று நினைக்கிறார்களோ என்னவோ!

மகிழ்ச்சிக்குக் காரணம், எனது கட்டுரையைப் பற்றி அறிந்த கொழும்புப் பெண்கள் என்னை விரும்பவோ மணந்துகொள்ளவோ மாட்டார்கள் என்று பெற்றோர்கள் கூறியதுதான்!

'கொழும்புப் பெண் என்ற அபாயம் வாழ்வில் குறுக்கிடக்கூடாது, நிச்சயமாகிவரும் கொழும்புப் பெண்கூட குதி உயர்ந்த காலணியும் தலைமுடியும் கழன்று விழக்கூடிய வேகத்தில் திரும்பி ஓடிவிட வேண்டும்' என்னும் எனது நோக்கம் ஒருவேளை நிறைவேறலாம் என்ற நம்பிக்கையில்தான் 'கொழும்புப் பெண்' என்ற கட்டுரையை எழுதினேன். இப்போது பெற்றோர்கள் என் மீது குறைப்படுவதிலிருந்தும் சீறிப் பாய்வதிலிருந்தும் எனது நோக்கம் ஒருவேளை என்ன நிச்சயமாகவே நிறைவேறலாம் என ஆறுதல் அடைந்தேன்.

கொழும்புப் பெண் வேண்டாம் என நான் கூறுவதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு. சிலவற்றை மட்டும் இங்கு கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது, கொழும்புப் பெண்ணுக்குத் தீனி போட்டுக் கட்டாது. தீனி என்று நான் குறிப்பிடுவது மாட்டு இறைச்சியையோ ஐஸ் போட்ட மீனையோ அல்ல. நான் குறிப்பிடுவது அவர்களுக்குத் தினமும், நவறு, ஒவ்வொரு வேளையும் அலங்காரப் பொருட்களுக்கு (அலங்கோரப் பொருட்கள் என்பர் பெரியோர்) போடவேண்டிய பணம் என்ற தீனியேயாகும்!

இரண்டாவது, கொழும்புப் பெண்ணைக் கட்டிக் கொண்டால் கூடவே ஒரு வேலைக்காரனையும் கட்டிக் கொண்டு மாரடிக்க வேண்டும். இல்லாவிட்டால் சமையல் வேலை அல்லது ஒட்டலில் உணவு எடுத்து வரும் வேலை, குழந்தைகள் பராமரிப்பு வேலை போன்றவைகளெல்லாம் என் தலையில் வந்து விழும்.

மூன்றாவது, கொழும்புப் பெண்ணைக் கட்டிக் கொண்டவன் அலுவலக நாட்கள் நேரங்கள் தவிர்ந்த ஏனைய ஓய்வு நாட்களில் அல்லது நேரங்களில் மனைவியுடன் தெரு வீதி வலம் திரிந்து கடைப் படிகள் ஏறி இறங்க வேண்டும். ஓய்வு நேரங்களில் படிப்பதிலும் எழுதுவதிலும் இன்பம் காணும் என்போன்றவர்களுக்கு இதெல்லாம் முடியக் கூடியதா?

நாலாவது, கொழும்புப் பெண் அதிகமான நேரத்தைக் கண்ணாடி முன் கழிப்பதால் நான் கண்ணாடிமுன் நின்று வெளிக்கிடவோ வெளிக்கிட்டாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துக்கு அலுவலகம் போய்ச் சேரவோ முடியாது. இன்னொரு கண்ணாடி வாங்கினால்போகிறது எனச் சிலர் அபிப்பிராயப் படலாம். அப்படி வாங்கினால் அவள் அதையும் வைத்துக்கொண்டு தனது பின் அழகையும் சரிசெய்துகொண்டிருப்பாளே! இதற்கு மேலும் கண்ணாடிகள் வாங்க எனது பொருளாதாரம் இடங்கொடாது மட்டுமல்ல அவைகளையெல்லாம் வைக்க எனது சிறிய வீட்டில் இடமும் இல்லை. அப்படி வாங்கி வைத்தாலும் அதற்கும் அவள் ஏதாவது வேலை வைக்க மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?

ஐந்தாவது, கொழும்புப் பெண்ணைக் கட்டிக் கொண்டு அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றால் அதுவும் ஒரு கொழும்புப் பெண்ணாகத்தானே இருக்கும். 'தான் போக வழியைக்காணாத மூஞ்சூறு விளக்கு மாற்றையும் கொண்டு போனதுபோல்' இருப்பவனுக்கு மூஞ்சூறு இரண்டு விளக்குமாறுகளைக் கொண்டு போனது போன்ற நிலை இதனால் ஏற்பட்டு விடுமல்லவா? (இதற்கு மேலும் பெண் குழந்தைகள் பிறந்தால் என்னவாகும் என்பதை, பிறக்கும் ஒவ்வொருபெண்ணுக்கும் ஒவ்வொரு விளக்குமாறு வீதம் கூட்டிக் கொள்ளவும்.)

இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது யாரோ ஒருவர் கூறிய பழமொழி ஒன்று நினைவுக்கு வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. "வீட்டைக் கட்டிப் பார் கலியாணத்தைச்செய்து பார்" என்ற அப்பழமொழியைக் கூறியவர் நிச்சயம் ஒரு கொழும்புப் பெண்ணைத் திருமணம் செய்து அல்லல் பட்டவராகத்தான் இருக்கவேண்டும். அவர் அந்தக் காலத்தில் வாழ்ந்து அந்தக் காலத்துக் கொழும்புப் பெண்ணைக் கட்டியபடியால் அவ்வளவுடன் நின்று விட்டார். இந்தக் காலத்தில் வாழ்ந்து இந்தக் காலத்துக் கொழும்புப் பெண்ணைக் கட்டியிருந்தாராஞல் 'செய்து பார்' என்று சொல்லி எம்மையும் அபாயத்தில் தள்ள எண்ணமாட்டார். 'செய்து சா' என்று எமக்கெல்லாம் எச்சரிக்கை அல்லவா செய்திருப்பார்?

அதோ ஒரு கடிதம் வருகிறதே! எனக்கு நிச்சயமானதுபோல் இருக்கும் கொழும்புப் பெண்ணைப் பற்றிக் குறிப்பிட்டேனல்லவா? அவளுடைய பெற்ருேர்களிடமிருந்து என்னை வேண்டாம் என்ற கடிதந்தான் வந்திருக்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இப்பொழுது எனது மகிழ்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா? வாழ்க எனது பேறு!

தப்பித்தவறி என் வாழ்வில் குறுக்கிட முயலும் கொழும்புப் பெண்கள் எங்காவது இருந்தால் அவர்கள் இந்த எனது கட்டுரையுடன் இனி எக்காலத்திலுமே குறுக்கிடமாட்டார்கள் என எண்ணுகிறேன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை எழுதுங்கள்!

இக் காலத்தில் கதை எழுத வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்கிறது. அப்படியான ஆசை இருந்தும் எழுதத் தெரியாமலும் முடியாமலும் தத்தளிப் பவர்களுக்கு இச் சிறு கட்டுரை வழிகாட்டுகிறது. இக் கட்டுரை மூலம் எழுதவும் படிக்கவும் தெரிந்த யாரும் கதைகள் எழுதிப் புகழும் பணமும் பெறலாம்.

கதை எழுத முதலில் தேவைப்படுவது, தங்கு தடையின்றி எழுதக்கூடிய பேனு, 'புல்ஸ்காப்'பேப்பர் கள், லோங் என்பலப்புகள், முத்திரைகள் வசதியாக இருந்து எழுதுவதற்கேற்ற மேசை நாற்காலி முத லியன. இத்துடன் நூல்கள் இரவல் பெறக்கூடிய நூல் நிலைய வசதி அல்லது நண்பர்கள். இவ்வளவு வசதிகளும் உங்களுக்கு இருக்கிறதா? இருப்பின் எழுத நீங்கள் அரைவாசி தகுதியானவர்கள் என்று பொருள். மேற்படி வசதிகள் இல்லாதவர்கள் அவை களைத் தேடியதும், கட்டுரையைத் தொடர்ந்து படிக் கலாம்.

நீங்கள் இதுவரை படித்த கதைகள் எத்த னையோ உங்கள் மனதில் மறக்காமல் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளில் ஒரு பத்துச் சிறு கதைகளை நன்கு ஞாப கப்படுத்திக் கொண்டு அவற்றிலுள்ள சம்பவங்கள் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து மாற்றி மாற்றிப் பாருங்கள்; சிறு கதை வந்து விடும். இது சிறிது கடினமாக இருந்தால் கதைகளை முன்னுக்கு வைத்துப் பார்த்துக் கொண்டே இந்த வேலைகளைச் செய்யுங்கள்.

இரண்டாவது வழி. நீங்கள் தமிழல்லாத பிற மொழி ஒன்றை இரகசியமாக ஒருவருக்கும் தெரியாது கற்க வேண்டும். அந்த மொழியை நீங்கள் பேசவோ எழுதவோ, தெரியுமென்று ஒருவருக்கும் காட்டிக் கொள்ளக்கூடாது. இதன்பின் நீங்கள் அம்மொழிக் கதைகளை இரகசியமாக வாங்கி மொழிபெயர்த்து விடுங்கள்.

மேலே காட்டிய இருவழிகளாலும் நீங்கள் சிறந்த எழுத்தாளர்களாக வரமுடியும். ஆரம்பத்தில் இந்த வழிகளைக்கொண்டு சிறுகதைகள் எழுதுங்கள். பின் போதிய பயிற்சியும் திறமையும் ஏற்பட்டபின் நாவலையும் நாடலாம். இந்த வழிகளைப் பின்பற்றி எழுதத் தொடங்கியதும் ஏதாவது பேட்டியின் போதோ பேச்சுவாக்கிலோ நீங்கள் யாருடைய எழுத்தில் ஆராய்ச்சி நடத்தினீர்களோ அவர்களை உங்களது அபிமான எழுத்தாளர் என்றே அவர்களது எழுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் படித்ததென்றோ சொல்லிவிடக் கூடாது. பிற மொழிகளிலிருந்து கதைகள் தயாரித்தவர்கள் தங்க ளுக்குப் பிறமொழி தெரியாதென்றும், பிறமொழிக் கதைகளைப் படிப்பதில்லையென்றும் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் அகப்பட்டுவிடுவீர்கள்.

இது தவிர இன்னொரு முறையிலும் கதைகள் எழுதலாம். சில வேளைகளில் உங்களுக்குத் தெரிந்த வர்கள் உங்களிடம் தாங்கள் எழுதிய கதையைக் காட்டி அல்லது தங்களது கற்பனையில் தோன்றிய கதையைச் சொல்லி "எப்படி என் கதை? பத்திரி கைக்கு அனுப்பலாமா?" எனக் கேட்பதுண்டல்லவா? அப்பொழுது நீங்கள் அக்கதை கூடாதென்றால் "நல் லது அனுப்பிப்பாரும்" என்று சொல்லுங்கள். உண் மையிலேயே நல்லதென்றால் "நல்ல கதையாயிருக்கு. ஆனால் போயும் போயும் எங்கள் இருவருக்கும் ஒரே கற்பனையா தோன்ற வேண்டும்? இதே கதைபோல் நானும் அல்லவா ஒரு கதை எழுதி இன்றுதான் பத் திரிகைக்கு அனுப்பியிருந்தேன்" என்று ஒரு பொய் யைச் சொல்லுங்கள். நண்பர் அவ்வளவுடன் நின்று விடுவார். இதன்பின் நீங்கள் நண்பரின் கதை யை உடனே எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பி விடுங் கள்.

நீங்கள் எந்த வழியில் கதைகள் எழுதினாலும் கதைகளுக்குத் தலைப்பிடுவதையும் பாத்திரங்கள் ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தெருக்களுக்குப் பெயர் சூட்டுவதையும், மட்டும் என்றாலும் உங்களது சொந்த அறிவிலிருந்து எடுத்து எழுதவும்.

இப்பொழுது உங்களுக்கு கதை எழுதுவது மிகவும் கடினமாகத் தோன்றுது என எண்ணுகிறேன். ஆனால் இன்னும் ஒரு கட்டத்தைக் கடந்தால் தான் நீங்கள் வெற்றிகாண முடியும்.

பத்திரிகை ஆசிரியர்கள் இருக்கிறார்களே! அவர்களுக்கு இந்தப் புது எழுத்தாளர்கள் என்றால் மிகவும் ஆத்திரம். கதை கிடைத்ததும் 'திருட்டுக் கதையாக இருக்கும் அல்லது தகுதியற்றதாயிருக்கும்' என வாசிக்காமலேயே குப்பைக் கூடைக்குள் போட்டு விடுவார்கள். முன்பு எழுதியவர்களாக இருந்தால் ஒருவித தயக்கமுமின்றிப் பிரசுரித்து விடுவார்கள்.

இதற்கு நீங்கள் செய்யக் கூடிய வழி கதைகளுடன் அனுப்பும் கடிதத்தில் ஆரம்ப எழுத்தாளன் என்பதை "...நான் முதல் முதல் எழுதும் கதை இத்துடன்..." என்று குறிப்பிட்டுக் காட்டி விடக்கூடாது. பழம் பெரும் எழுத்தாளர்கள் எழுதுவதுபோல் "...உங்கள் பத்திரிகைக்கு நான் எழுதுவது இது தான் முதல்தடவை..." என்பதுபோல் தொடங்க வேண்டும்.

இனி, நீங்கள் கதைகள் எழுதலாம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக்கு வளைக்கும் நல்லம்மா!

நல்லம்மாவை வர்ணிப்பதென்றால் 'கட்டாக் காலி மாடு சுவைத்த பனம்பழத் தும்புகளை ஒத்த கேசம்; கழுவிய நெருப்புத் தணலன்ன கன்னம்; அட்டை அதரத்தாள்; நத்தை நாசியாள்; புலிப் பல்லாள்; பூனைக் கண்ணாள்; உரல் இடையாள்; உலக்கைக் கையாள்' என்றவாறுதான் வர்ணிக்க வேண்டும்.

நல்லம்மாவின் தினசரி அலுவல்களில் முக்கியமானவற்றின் விவரம் இதோ :-

பாடசாலைகள் அலுவலகங்கள் தொடங்கும் காலை வேளைகளிலும், அவை முடிவடையும் மாலை வேளைகளிலும் அவள் தனது தெருப்படலையில் ஒரு கையும் மதில் சுவரில் ஒரு கையுமாக நின்றுகொண்டு வருவோர் போவோரையெல்லாம் பார்த்துத் தனது நாக்கு வளைக்கும் கலைக்குக் 'கரு' தேடிக்கொண்டிருப்பாள்.

சமையல் அல்லது வேறு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இடை நேரத்தில் 'கரு' கிடைப்பதற்கான அறிகுறி தென்பட்டாலும் படலையை நோக்கி விரைந்து விடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பகல் பத்து மணி தொடக்கம் பதினொரு மணி வரையும், பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் மூன்று மணி வரையும் வீடு வீடாகச் சென்று பிறரைப்பற்றி நாக்கு வளைத்தல்!

இரவு ஏழு மணி தொடக்கம் ஒன்பது மணி வரை தனது வீட்டிலுள்ளோருடனும் வீட்டுக்கு வருவோரிடமும் பிறரைப் பற்றித் தனது வீட்டிலுள்ள திறந்த வெளி அரங்கிலிருந்து நாக்கு வளைத்தல்!

நாக்கு வளைப்பதில் நல்லம்மாவுக்கு நிகராக வேறு யாரையும் சொல்ல முடியாது. அவளுக்குத் தானும் தனது கணவன் பிள்ளைகளும் இன்னும் தன்னைச் சேர்ந்த சிலரும்தான் உண்மையில் ஒரு குறையுமே இல்லாத உயர்ந்த பிறவிகளென்றும் மற்றவர்கள் எல்லாரும் ஏதோ ஒரு வகையிலாவது குறையுடையவர்களே என்றும் எண்ணம்.

"அவளின் அலங்காரத்தைப் பார் அலங்காரத்தை! இவ்வளவு காலமாகியும் இன்னும் சேலையை அழகாகக் கட்டக்கூடத் தெரியவில்லையாம்! அவளின்ரை பல்லுக்கும் சேலைக்கும் அழகாயிருக்கு."

"வேலுப்பிள்ளை போயும் போயும் இந்த மூக்கில்லாதவனையா மருமகனாக எடுத்தான். இந்த உல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திலே மூக்குள்ளவன் ஒருவனும் வேலுப்பிள்ளைக்குக் கிடைக்கவில்லையாமோ?"

"பெரிய பிள்ளையாகி இவ்வளவு காலமாகியும் அவள் பாவிக்க வெட்கம் என்பதேயில்லை. குதிரைப் பாய்ச்சலில் நிலம் அதிர அதிரத் தெருவழியப் போருளே தேவடியாள்."

"கந்தையற்றை நாலு பொடியளும் பள்ளிக்குப் போறதைப் பார்த்தால் எரிந்த வீட்டுக் கப்புகள் நடந்து போகிறமாதிரிக் கிடக்குது. மனிதன்ரை முழுவியளத்துக்கு நல்ல சரக்குகள்."

இப்படியாக நல்லம்மா ஒவ்வொருவரையும் நாக்கு வளைப்பதுமல்லாமல் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மூளி அலங்காரி, மூக்கறையன், குதிரை, கரிக்குருவி, பல்லன் என்றெல்லாம் பட்டங்களும் வழங்கி விடுவாள்.

நல்லம்மாவுக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரியாவிட்டாலும் ஒருசில சொற்களைத் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிருள். அவைகளையெல்லாம் இடையிடையில் தனது பேச்சில் பயன்படுத்திக்கொள்வாள், ஆனுல் அப்படிப் பிறர் யாராவது ஆங்கிலச் சொற்களைத் தமிழோடு கலந்து பேசினுல் "இதென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோடியாம்; பேசுவதென்றால் ஒன்றில் இங்கிலிசில் பேசவேணும்; இல்லாவிட்டால் தமிழில் பேசவேணும்" என்று நாக்கு வளைப்பாள்.

அதுமட்டுமல்ல, அப்படிப் பேசுபவர்களைப் பற்றி அவர்கள் சரியாக உச்சரித்தால் கூட "இந்த வெக்கக்கேட்டை ஏன் பறைவான்? அவன் பாவி இங்கிலீசு பேசுறதென்று சொல்லிப் பச்சைப் பிழையாக இங்கிலீசுச் சொற்களை உச்சரிக்கிறான். 'தனக்கெட்டாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்' என்று சொல் லுவதுபோல்தான் எக்கணம் முடியும்" என்றும் நாக்கு வளைப்பாள். ஆனால் நல்லம்மா மட்டும் 'ஏயர் மெயில்' காகிதத்தை 'ஏறு மயில்' காகிதம் என்றும், 'ஏரேப்பிளேனை', 'ஏருப் பிளான்' என்றும், 'ஸ்பெஷலை', 'புசல்' என்றும் சொல்லும் கதைகளை யெல்லாம் யாரிடம் சொல்லி அழுவது?

நல்லம்மா கோவில் சினிமா கடைத்தெரு எங் காவது போய்விட்டு வந்தால், வந்ததும் நகைநட்டைக் கழற்றுவது, கால்முகம் கழுவிச் சாப்பிடுவது, களைப் பாறுவதெல்லாம் பிறகுதான். அதற்குமுன் தான் பாவம் அவளுக்குக் கோவில் சினிமா கடைத்தெரு அநுபவங் களை வைத்து நாலு பேருக்கு முன் நாக்கு வளைக்கும் மகத்தான கடமை மலைபோல் இருக்கிறதே! நாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைக்கும் கடமை நல்லம்மாவுக்கு இருக்கும்போது அவள் பசி நோக்காள், கண் துஞ்சாள், கருமமே கண்ணுயிருப்பாள்.

நல்லம்மா அடிக்கடி எங்கள் வீட்டுக்கும் வருவாள். அவளுக்கு—சூரியன் உதிக்க மறந்தாலும் தினமும் குறைந்தது நாலு பேரைப்பற்றி என்ருலும் நாக்கு வளைக்க மறவாத அந்த உத்தமிக்கு—நாக்கு வளைக்கும் கலைக்காகத் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையுமே துறக்கத் தயாராயுள்ள அந்த மங்கையர் திலகத்துக்கு ஒரு தகுந்த பரிசு கொடுத்துக் கௌரவிக்க வேண்டுமென்பது எனது வெகு நாளைய ஆசை! அதற்கான பரிசும் எப்போதோ வாங்கியாகிவிட்டது. அதை அவளிடம் கொடுப்பதற்குத்தான் எனக்கு வழியும் தெரியவில்லை, வகையும் புரியவில்லை.

அந்தப் பரிசு—ஒரு முகம்பார்க்கும் கண்ணுடியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் புராணம்.

எங்கள் கண்கண்ட கலியுக கசவாரமாகிய கந்தரம்மானின் புராணத்தை எழுதுவதற்கு, ஒறிஜினல் கந்தபுராணத்தின் கதாநாயகனை கந்தசாமியாரும், ஆசிரியரான கச்சியப்பரும் எனக்குத் துணை நிற்பார்களாக!

கசவாரக் கந்தரின் அறுபதாவது பிறந்த தினம் அண்மையில் வர இருக்கிறது. அன்னாரின் நினைவுநாளை ஒட்டி அவரது வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றை உங்களுக்குத் தருவதில் பெருமைப்படுகிறேன். கந்தரின் வாழ்வை ஊன்றிக் கவனித்து அவரைப் பின்பற்றுவதன் மூலம் நீங்களும் பணக்காரர் ஆகலாம் என்ற எனது பரந்த நோக்கமே என்னை இக்கட்டுரை வரையும்படி வற்புறுத்தியது.

கந்தரை யாழ்ப்பாணத்தில் கசவாரக் கந்தரென்றும் கொழும்பில் 'ஓசி'க் கந்தரென்றும் அழைப்பார்கள். இவர் தனது கசவாரத்தனத்தாலும், ஓசித்தனத்தாலும் ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருக்கிருர்; இன்னும் சேர்த்தும் வருகிருர். மனைவியோ மக்களோ இல்லாத இவருக்கு ஏன் இத்தனை பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தயவு செய்து என்னை நீங்கள் கேட்டுவிடாதீர்கள். அந்தச் சங்கதி உங்களைப் போலவே அடியேனுக்கும் தெரியாது.

கந்தர் எப்பொழுதும் தலையைக் குனிந்தபடியே-அதாவது நிலமடந்தையைப் பார்த்தபடியே செல்வார். இதனால் இவர் இதுவரை சுமார் ஐந்நூறு ரூபா பெறுமதியான பொருட்களும் நூறு ரூபாயும் 'போட்டுக் கிடந்து' எடுத்திருக்கிறார்.

இவருக்குக் கொழும்பில் வீட்டுப் பிரச்சினையோ வாடகைப் பிரச்சினையோ கிடையாது. கொழும்பில் வேலை கிடைத்ததும் இவரது தகப்பனருக்கு அறிந்த கொழும்பு நண்பர் ஒருவரின் வீட்டில் போய்த் தொத்திக்கொண்டார். வீட்டுக்காரரும் 'ஓர் அறை காலியாக இருக்கிறதே! ஆளும் அறிந்தவராக இருக்கிறாரே' என்று இவருக்கு 'ஓசி' யில் அறை கொடுக்கச் சம்மதித்துவிட்டார். இந்த அறையில் இவரால் ஓர் ஆண்டு காலந்தான் இருக்க முடிந்தது. அதன்பிறகு கந்தரின் நடை உடை போக்கு யாவற்றிலும் அசல் கசவாரத்தனத்தைக் கண்ட வீட்டுக்காரர், ஆளைத் தங்களுடன் வைத்துக்கொண்டால் தங்கள் மதிப்புக்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமென்று கருதி ஆளை அப்புறப்படுத்திவிட்டார். இதற்குப் பிறகும் கந்தர் முன்போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனது துணையுடன் முயன்று இன்னொரு வீட்டில் ஒட்டிக்கொண்டார். இப்பொழுது கந்தர் வசித்து வருவது பதினோராவது வீடாகும்.

கந்தர் வேலைக்குப் போவதற்கு காலை ஐந்து மணிக்கே ஆயத்தமாகிவிடுவார். வேலையால் வீடு திரும்புவதற்கும் அநேகமாக இரவு எட்டு மணியாகி விடும். ஏன் தெரியுமா? இவர் 'பஸ்' சுக்குப் பணம் கொடுப்பதில்லை. பஸ்சில் ஏறி கொண்டக்டர் 'டிக்கட் கொடுக்கும்வரை இருந்துவிட்டு கொடுக்கும்போது 'அய்யய்யோ நான் மாறி ஏறிவிட்டேனே!' என்றோ 'காசை விட்டுவிட்டு வந்துவிட்டேனே!' என்றோ சொல்லி இறங்கி விடுவார். இதற்கிடையில் இவர் தனது பிரயாண தூரத்தில் ஒரு சிறு பகுதியையாவது கடந்துவிட்டிருப்பார். இப்படியே இவர் ஆபீசுக்குப் போகும்போதும் வரும்போதும் பணம் கொடாது ஏராளமான 'பஸ்' சில் பிரயாணம் செய்வார். சில வேளைகளில் கார் வைத்திருக்கும் இவரது சக ஊழியர்களோ அல்லது இவர்மீது இரக்கம் கொண்டவர்களோ இவரைத் தங்கள் காரில் ஏற்றிப் பறிப்பதுண்டு. (பறிப்பதென்று சொல்வதால் இவர் ஒரு பாரமான பெரிய உருவமுடையவரெனத் தயவுசெய்து எண்ணவேண்டாம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரிடம் தபால் போடும் குணமோ, தபாலைப் பதிவுசெய்யும் பழக்கமோ, தந்தி அடிக்கும் பண்போ கிடையாது. எந்தப் பெரிய பிரபுக்கென்றாலும் 'போஸ் காட்'தான் போடுவார். அந்தப் போஸ்காட்டை வாசிப்பதற்கு ஒரு பூதக்கண்ணாடி கட்டாயம் தேவை. அவ்வளவு சிறிய—நெருக்கமான எழுத்துகள்.

நமது கந்தருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மதிய உணவுக்கு எந்தவிதச் செலவும் கிடையாது. இவர் அன்றைய தினம் பணக்காரர்போல் உடையணிந்து கொண்டு ஒரு கையிலே கூடையுடனும் மறு கையிலே பெரிய 'பர்சு'டனும் சந்தைக்குப் போய் ஒன்றும் வாங்காது போனது போலவே திரும்புவார். ஆனால் திரும்பும்போது இவரின் பசி பறந்திருக்கும்; வயிறு நிறைந்திருக்கும். எப்படியென்று கேட்கிறீர்கள்? முதலில் சந்தையிலுள்ள முந்திரிப்பழம் விற்கும் இடத்திலே போய் விலை கேட்பார். விலையைச் சொன்னதும் "உந்தப் புளிக்கு இந்த விலையோ?" என்பார். உடனே கடைக்காரர் "தின்றுபார்த்து வாங்கும்" என்று இரண்டு பழங்களைக் கொடுப்பார். இவர் என்ன செய்வார் தெரியுமா? பழத்தைத் தின்றுவிட்டு "பச்சைப் புளி" என்றவாறு அங்கிருந்து அகன்று விடுவார். இப்படியே சந்தையின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று மாம்பழத்துண்டு, பலாப்பழச்சுளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடம்பழச் சுளை, அன்னுசிப்பழத் துண்டு முதலிய வைகளைச் 'சாம்பிள்' பார்ப்பதுபோல் ஒரு கை பார்த்து விட்டு வருவார். இதற்கும் பிறகுமா அவருக் குப் பசி இருக்கும்?

ஓட்டல் உணவு சாப்பிட்டுவந்த கந்தரை ஒருமுறை சிலர் அணுகி "ஓட்டல் உணவு சாப் பிடுகிறீர்களே! இதனுல் ஏராளமான பணத்தை இழப்பதுடன் வைத்தியருக்கும் பணம் கொடுக்க வேண்டி வருமே! ஒரு திருமணத்தைச் செய்தால் இந்தச் செலவுகள் ஒன்றும் வராதே!' என்ருர்கள்.

உடனே கந்தர் "என்னய்யா அலம்புகிறீர்கள்? என்னைத் திருமணம் செய்யப் போகிறவளுக்கு வயிறு இல்லையா? அப்படியே இருந்தாலும் அவள் வயிற்ருேடு மட்டும் நின்றுவிடுவாளா? சட்டைகளுக்கு, சேலைக ளுக்கு, நகைகளுக்கு, அதுகளுக்கு இதுகளுக்கென்று பணம் கேட்கமாட்டாளா? அவள் குழந்தைகளை வேறு பெற்றுவிட்டால் அதுகளுக்கு என்ன செய்வது? நான் ஓட்டலுக்குக் கொடுப்பதிலும், வைத்தியருக்குக் கொடுக்கப்போவதிலும் எத்தனைமடங்கு பணம் இவற் றிற்கெல்லாம் வேண்டும் தெரியுமா?" என்று மடக்கி விட்டார். இதன் பிறகுமா வந்தவர்கள் நிற்பார்கள்.? ஓடிவிட்டார்கள், ஓடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக கந்தரின் வாழ்க்கைக் குறிப்புக்களைப் பற்றி எவ்வளவோ எழுதலாம். எழுதினுல் விளக்கிலுள்ள எண்ணெய் வற்றிவிடும், பேனுவில் மை குறையும், பேப்பர்கள் பல வேண்டும். கந்தரின் வாழ்க்கையைப் பின்பற்ற முயலும் எமக்கு இவைகளெல்லாம் மாறுபட்டதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிட வித்தகன் சொக்கலிங்கம்!

சொக்கலிங்கம் ஒரு பிரபல சோதிடன் மட்டுமல்ல அவரை ஒரு சோதிட வித்தகன் என்றே சொல்லிவிடலாம். அவர் சொன்னால் சொன்னது தான். சொல்லியது சொல்லியவாறே நடந்து தீரும்.

சொக்கலிங்கத்திடம் சோதிட அறிவிலும் பார்க்கப் பல மடங்கு புத்திக்கூர்மையுண்டு. ஏன் அவ்வளவு தூரம் சொல்லுவான், அவரிடம் சோதிட அறிவு இல்லையென்றுகூடச் சொல்லலாம். ஆனால் அவரிடமுள்ள புத்திக்கூர்மையே அவரைச் சோதிட வித்தகன் ஆக்கிவிட்டது.

"உங்கள் மகளுக்கு இந்த ஆண்டிலும் சம்பந்தம் ஒப்பேறுது என்றுதான் சாதகம் சொல்லுது. எதற்கும் பிள்ளையாரை நன்றாக நேர்ந்து ஒரு மோதக பூசை செய்யுங்கள். பிள்ளையாருடைய கடாட்சம் பிள்ளைக்குச் சிலவேளை கிடைத்தாலும் கிடைக்கும்" என்று சொக்கலிங்கம் ஒரு குறிப்பைப் பார்த்துச் சொல்லுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் அந்தப் பேர்வளிக்கு அந்த ஆண்டில் திருமணம் நிறைவேறினாலும் சரி நிறைவேறாவிட்டாலும் சரி சொக்கலிங்கத்தின் சோதிடம் பலித்ததாகத்தான் முடியும். திருமணம் நிறைவேறினால் "நான் சொன்னதுபோல் பிள்ளையாரது கடாட்சம் பிள்ளைக்குக் கிடைத்துத்தானே விட்டது!" என்பார்.

திருமணம் நிறைவேறாவிட்டாலும் "நான் தானே இந்த ஆண்டும் சம்பந்தம் ஒப்பேறாது என்று முன்பு சொன்னேனே!" என்பார்.

யாராவது குறுக்கிட்டு "பிள்ளையாரை நேர்ந்து மோதக பூசை செய்தால் பிள்ளையாரது கடாட்சம் கிடைக்கும் என்றீர்களே!" என்று சொன்னால் சொக்கலிங்கம் அவர்கள் "சிலவேளை கிடைத்தாலும் கிடைக்கும்' என்றுதானே சொன்னேன்" என்று அந்த வசனத்தை அழுத்தமாகச் சொல்லுவார். இல்லாவிட்டால் "நீங்கள் ஒரு நிலைப்பட்ட மனத்துடன் பிள்ளையாரை வேண்டவில்லைப்போல் இருக்கிறது. அதனால்தான் அவரது கடாட்சம் கிடைக்காமல் போய் விட்டது" என்பார்.

"உங்கள் மகனுக்கு வெள்ளி திசை பிறந்திருக்கிறது. இந்தமுறை நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பதே முக்கால் வீதமும் அவன் பரீட்சையில் தேறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவான் என்று நம்பியிருக்கலாம்'' என்று இன்னொரு குறிப்பைப் பார்த்துக் கூறுவார்.

அதன்பின் அந்தப் பையன் பரீட்சையில் தோல்வியடைந்து, அவனது தகப்பனுர் இவரிடம் வந்து ''என்ன ஐயா பையனுக்கு நல்லகாலம்; அவன் சித்தியடைவான் என்றீர்களே! அவன் இப்போது பரீட்சையில் மண் கவ்வி விட்டானே! இதற்கு என்ன சொல்லப்போகிறீர்கள்?'' என்று கேட்டால் சொக்கலிங்கம் சோர்ந்துவிடமாட்டார். ''அப்படியா சங்கதி? நான் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பதே முக்கால் வீதம் சித்தியடைவான்' என்று சொன்னேனே தவிர 'நூற்றுக்கு நூறு வீதம் சித்தியடைவான்' என்று சொல்லவில்லையே! பையன் பாவம் அந்தக் கால் வீதத்திற்குள் அகப்பட்டு விட்டான்போல் இருக்கிறது'' என்பார்.

நமது சொக்கலிங்கத்தைக் கண்டாலோ அல்லது நினைத்தாலோ எனக்குக் கூடவே என்றே ஒரு முறை—எங்கோ தெரியவில்லை கேள்விப்பட்ட ஒரு வானிலை அறிக்கைதான் ஞாபகத்துக்கு வருவதுண்டு.

''நாட்டின் சிற்சில பகுதிகளில் இலேசாகவோ மிதமாகவோ மழை பெய்யக்கூடும்'' என்பதே அந்த அறிக்கையின் முக்கிய பகுதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிக்கையை ஒருகணம் எண்ணிப் பாருங்கள். நாட்டின் எந்தப் பகுதியில் மழைபெய்தாலும் இந்த அறிக்கையைப் பிழை என்று சொல்ல முடியாது. அங்கு சின்ன மழை பெய்தாலும் பெரிய மழை பெய்தாலும்கூட இந்த அறிக்கை சரியே! ஏன் மழை பெய்யாவிட்டால்கூட அறிக்கையைப் பிழையென்று கூறமுடியாது. ஏனெனில் "பெய்யக்கூடும்" என்றுதானே அறிக்கை கூறுகிறது.

சுருக்கமாகச் சொல்லுவதாயிருந்தால் மேற்படி அறிக்கையை தீர்க்கதரிசனமாகத் தயாரித்தவரை அவரது வானிலை அறிவுக்காக இல்லாவிட்டாலும் அவரது புத்திக்கூர்மைக்காக நாம் அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதுபோலவே நமது சோதிட வித்தகன் சொக்கலிங்கத்தை அவரது சோதிட அறிவுக்காக இல்லாவிட்டாலும் அவரது தீர்க்கதரிசனத்துடன் சோதிடம் சொல்லும் புத்திக்கூர்மைக்காகவேனும் அவரை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வாழ்க சோதிட வித்தகன் சொக்கலிங்கம்! வெல்க அவரது பணி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரதர் தூது!

*[1964ம் ஆண்டில் இலங்கையில்-அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மாரி பொய்த்து நாடு வரண்டு வழங்குன்றியது. அப்பொழுது யாழ்ப்பாண மக்களுக் காக இரங்கி நாரதர் வருணனிடம் தூது சென்ற கதைதான் இது!]*

"ஹலோ நாரதரா? வருக வருக! எங்கிருந்து வருகிறீர்? என்ன காரணமோ!" என்றுர் வருணபகவான்.

"நேரே பூலோகத்திலுள்ள-ஆசியாவிலுள்ள - சிலோனிலுள்ள - யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறேன். காரணமில்லாமலா வருவேன்? அவ்வூர் மழையின்றி வரண்டுபோகிறது. 'வெல்'லுகளுக்குள்ளேகூட 'வாட்டர்' வற்றி வருகிறது. நெற்பயிர் எல்லாம் நாசமாகி விட்டன. மக்களெல்லாம் வரப்போகும் பஞ்சத்தை எண்ணி எண்ணி நெஞ்சம் நொந்து வாடிப்போய் இருக்கிருர்கள். அடுத்த விதைப்புக்கு விதைநெல்லுக் குக்கூட மக்கள் தவிக்கப்போகிருர்கள். இதனுல் இவைகளெல்லாவற்றிற்கும் காரணமான உன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களெல்லாம் இரக்கமற்ற அரக்கனெனத் திட்டு திட்டெனச் சதா திட்டியவாறு இருக்கிறார்கள்...”

“ஊம்...” என்று அசட்டையாகப் பெருமூச் செறிந்தார் மழைக்கடவுள்.

“உண்மையில் உனக்கு இரக்கமென்பது இல்லைத்தானா? மக்களின் வேதனையைப் பார்த்து விளை யாடிக்கொண்டிருக்கிறாயே! அப்பாவி மக்களின் வயிற் றில் மண்ணை அள்ளிப்போடாதே. உன் கடமையைச் செய். மாதம் மும்மாரி பெய்யத்தான் உனக்கு முடிய வில்லையானால் மாரியிலாவது பெய்யக்கூடாதா?” நாரதர் பொரிந்து தள்ளினார்.

“என்ன அந்த ருஸ்கல்களுக்கா இரங்குகிறாய்? இவ்வளவுகாலமும் மழை பொழிந்து மழை பொழிந்து நான் கேட்ட திட்டுகள் கொஞ்சமா? இந்த முறையாவது அவர்களுக்கு ஒரு பாடம் படிப்பித்தே தீருவேன். மை டியர் நாரதர், பிளீஸ், இந்த விஷயத் தில்மட்டும் நீ தலையிடாதே. இது என் சொந்த விசயம். நீ போய்விடு...” என்றார் வருணன்.

“என்ன, மழை பொழிந்ததற்காகத் திட்டினார் களா? என்ன வருணா, உனக்கு வர வர மூளை மக்கர் ஆகி வருகிறதா!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு உலகமெல்லாம் திரிந்தும் உலகம் தெரியவில்லை நாரதரே! போன வருடம் நடந்ததைத் தான் கேளேன். அங்கு நான் பகல் நேரத்தில் மழை பொழிந்தபோது பாடசாலை மாணவர்கள், கந்தோர் களுக்கு போவோர் போன்றவர்களெல்லாம் 'இந்தக் கோதாரி மழை இப்பொழுதுதான் பெய்யவேண்டுமா' என்று திட்டினுர்கள்"

"நியாயம்தானே, உனக்குப் போயும் போயும் மழை பெய்வதற்குக் கிழமைநாட்கள்தான் அகப்பட் டதா? அப்படிப் பெய்தால் பொதுவாக எல்லோருக் குமே தொல்லை தானே!"

"என்ன நீயும் அவர்களோடு சேர்ந்து பாடு கிருயா? சரிதான். கிழமை நாட்களில் பெய்வதில்லை யென்று ஞாயிற்றுக்கிழமைகளில் பெய்தபோது என்ன சொன்னுர்கள் தெரியுமா? 'இந்தப் பாழாய்ப்போன மழை ஞாயிற்றுக்கிழமைதான் பெய்யவேண்டுமா? ஓய்வாக இருக்கும் இந்த ஒரே நாளிலும்கூட ஓர் உடுப்பைத் தோய்த்துக் காயவைக்க இந்த சனியன் விடுகிறதில்லையே!' என்று திட்டினுர்கள்."

"நீயும் அவர்களோடு சண்டித்தன முறையில் தான் நிற்கிருய். ஏன் இரவில் பெய்வதற்கு என்ன வாம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதையும்தான் கேளேன். அப்படிப் பொழிந்த போது 'செக்கன்சோ' பார்த்துவிட்டு சைக்கிளிலும் நடந்தும் வீடுதிரும்பும் வாலிபர்களெல்லாம் என்னைத் திட்டுகிருர்களே!"

"வருணு! நீ இந்த வீண் கௌரவங்களை யெல்லாம் விட்டு விட்டு மக்கள் விரும்பும் நேரத்தில், அதாவது இரவு ஒரு மணி தொடக்கம் காலை ஆறு மணிவரை பொழியலாமே."

"அப்படிப் பெய்தாலும் அந்த மக்கள் விடுகிருர்களா? 'சோ' என்ற இரைச்சல் நித்திரை செய்ய விடுகிறதில்லையாம். இந்த நேரத்தில் கள்ளர் வந்தால் கத்திஞலும் ஒருவரும் துணைக்கு வரமுடியாதே என் பதை நினைத்தால் நித்திரை வருகிறவர்களுக்கும் வராதாம்!"

"நியாயமான பயம்தான். அப்படியாஞல் ஒன்று செய்யலாமே..." நாரதர் முடிக்கவில்லை.

"நிறுத்து...நிறுத்து, அவர்கள் வேண்டியபோது பெய்யவும் வேண்டாதபோது பெய்யாது விடவும் அவர் களின் பகடைக்காயல்ல நான், இதற்கு நீ வேறு தூது வந்திருக்கிருயா? யாழ்ப்பாண மக்களின் அகங்காரத் துக்கு நான் இந்தமுறை எப்படியும் ஒரு பாடம் படிப் பித்தே தீருவேன், நாரதரே! நீர் எழுவீர்! இங்கிருப் பதில் பயனில்லை!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வருணா! இப்பொழுது எந்தநாளில் பெய்தாலும் எப்போ பெய்தாலும் அதை அவர்கள் வரவேற்பார்கள். நீர் பெய்யலாம்.''

"முடியாது, பழிக்குப் பழிவாங்கியே தீருவேன். வேண்டுமானால் அடுத்த ஆண்டு பார்க்கலாம்.''

வருணன் இரங்க மறுத்தார். நாரதர் திரும்ப மறுத்தார். "அப்படியானால் வேறு வழியே இல்லையா?'' என்றார்.

"வள்ளுவர் என்ற ஓர் ஏஞ்சன் பூலோகமறைந்தார் ,கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்று பாடியிருக்கிறாரே! அப்படியானால் தினமும் கணவனைத் தொழுது எழும் கற்புள்ள பெண்களிடம் 'மழைபெய்' யெனக் கூறுமாறு கூறிப்பாருங்களேன்."

"அதுதான் முடியாதே! அது சாத்தியமில்லை."

"ஏனோ!" என ஆச்சரியப்பட்டார் வருணன்.

"கணவனைத்தொழுது எழும் பெண்களைவிட மனைவியைத் தொழுது எழும் கணவன்மார்களே அங்கு அதிகம். அப்படிக் கணவனைத் தொழுது எழும் பெண்களைக் கண்டுபிடித்து 'பெய்' என்று சொல்லுமாறு சொன்னாலும் அவர்கள் சொல்லமாட்டார்கள்."

"ஏன் நாரதரே அப்படிச் சொல்லுகிறீர்கள்!" என மீண்டும் வருணன் ஆச்சரியப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றைக்கு யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் எந்த நாளில் எந்த நேரத்தில் மழை பெய்தாலும் வரவேற்பார்கள் என்று சொன்னேன். ஆனால் கணவன்மார்களைத் தினமும் தொழுது எழும் பெண்கள் மட்டும் அதை விரும்பமாட்டார்கள். ஏனென்றால் கணவனைத் தொழுது எழும் பெண்ணுக்கு கணவன் எப்பொழுதும் உச்சி குளிர்ந்து 'சம்திங்' கொடுப்பானல்லவா? அதைக்கொண்டு 'ஷொப்பிங்' செல்லும் போது மழை பெய்தால் அவர்களுடைய 'டிரெஸ்' எல்லாம் 'பேட்டி'யாகி விடுமல்லவா? கோடியிலெல்லாம் 'கரும்பயன்' பிடித்துவிடுமல்லவா? எனவே அவர்கள் மழை பெய்யும்படி ஒருபோதும் சொல்லமாட்டார்கள்."

"அப்படியானல் நாரதரே யாழ்ப்பாணத்துக்கு மழை பொழிய இந்தமுறை ஒரு வழியுமில்லை. தயவு செய்து போய்விடும்."

"கொடும்பாவி கட்டியிழுத்தால்...?" நாரதர் கேட்டார்.

"முடியாதென்றால் முடியாதுதான். நீர் போகிறீரா இல்லையா? போகாவிட்டால் 'பிறதருக்கு'ப் போன்பண்ணி நீர் எந்த மக்களுக்காகத் தூது வந்தீரோ அதே மக்களுக்கு மேலும் இன்னல்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்போகிறேன், பார்" என்ற வருணன், டெலிபோன் இருக்குமிடத்திற்குப் போனார்.

"ஹலோ...ஐ ஆம் வருணன் ஸ்பீக்கிங்...மிஸ்டர் வாயு இஸ் தெயர்..."

[இதன்பிறகுதான் நூற்றுக்கணக்கானோரின் உயிர்களையும், உடைமைகளையும் கொள்ளைகொண்ட கோரப் புயல் வீசியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாப் பித்தன் செல்வராசன்!

செல்வராசன் பார்க்காத சினிமாப்படங்களே இல்லையெனலாம். சினிமாப்படங்கள் 'சென்சார் போட்' டுக்குத் தப்பினாலும் தப்பலாம்; ஆனால் நமது செல்வராசனுக்கு அவை தப்பமுடியாது. அவன் எல்லாச் சினிமாப் படங்களையும் பார்ப்பது மட்டுமல்ல, அவைகளைப் பல தடவைகளும் பார்ப்பான்.

செல்வராசனுக்குத் தெரியாத சினிமா நடிகர்கள், நடிகைகள், டைரக்டர்கள், தயாரிப்பாளர்கள், பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், கதை வசன கர்த்தாக்கள் என்று யாருமே இல்லை. அவர்கள் எல்லாருடைய பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை வரலாறுகள் யாவற்றையும் அவன் தெரிந்து வைத்திருப்பதுடன் அவர்களது புகைப்படங்களையும் சேகரித்து வைத்திருக்கிறான். அவர்கள் எல்லோருடனும் அவன் கடிதத் தொடர்புகளும் கொண்டிருக்கிறான். இதில் பாதி வெற்றி, பாதி தோல்வி!

சினிமாப் படங்களைப் பார்ப்பதுடன் செல்வராசன் நின்றுவிடமாட்டான். சினிமாப் படங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியே சதா சிந்தித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருப்பான். குறைந்தது தினசரி ஆறுதடவைகளும் சனி ஞாயிறு பத்துத் தடவைகளும் சினிமாபற்றி யாரு டனுவது உரையாடாவிட்டால் அவன் அன்றைய நாளை அவமாகப்போன நாள் என்றே கருதுவான்.

செல்வராசனுக்குப் பக்கத்தில் இருந்து சினிமா பார்ப்பதென்ருல், அதைவிடத் தொல்லை வேருென்று மில்லை. கதாநாயகனின் பெயர் காட்டும்போது—கதா நாயகனை முதல் முதல் காட்டும்போது — கதாநாயகி ஆபத்தில் சிக்கிய நேரத்தில் கதாநாயகன் அங்கு திடீ ரென்று தோன்றும்போது—கதாநாயகன் சண்டைக் காக கொடுக்கிழுத்துக் கட்டும்போது—கதாநாயகன் வில்லனுக்குக் கொடுக்கும் ஒவ்வோர் அடியின்போது— அவன் கைதட்டி விசிலடித்து ஒரே ஓலமிடுவான். அதுமட்டுமா? அடிக்கடி "இந்தா புலி வரப்போகுது," "இன்னும் கொஞ்ச நேரத்தில் எம். ஜி. வருவார்" "இதிலைதான் காதல் காட்சி இருக்கு," "சரோசாதேவி யின் பாட்டொன்று இனித்தான் வரும்" என்றெல் லாம் அலட்டியபடியும் இருப்பான்.

எந்த சந்தர்ப்பமானுலும் யாராயிருந்தாலும்— அங்கு செல்வராசன் இருந்தால்—அவன் பேசவேண்டி வந்தால்- அது சினிமாவை அடிப்படையாகக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமைகள், எடுத்துக் காட்டுகளுடன்தான் வெளி யாகும்.

"ஓ அவரா? அவர் நல்ல அழகனுயிற்றே! உடம்பு எம். ஜி. ஆரைப்போல இருக்கும். முகவெட்டு நம்ம ராஜேந்திரன் மாதிரியே இருக்கும். தலை நெளி வெல்லாம் சரியா ஜெமினியைப்போல்தான் இருக்கும். நிறம் முத்துராமனை அப்படியே ஒத்திருக்கிறது. ஆனுல் குரல்தான் கொஞ்சம் எம். ஆர். ராதாவைப்போல் கர கரப்பாக இருக்கும்."

"அவளுக்கென்ன குறை? பத்மினியை உரித் துப் படைத்தமாதிரி இருக்கிருள். துடுக்குத்தனத்தை யும் கோபம் வந்தால் முகம் படுகிறபாட்டையும் பார்த் தால் அசல் பானுமதிதான்! ஆனுல் உருவம்தான் வர வரக் கொஞ்சம் அங்கமுத்துபோல வரப்பார்க்கிறது."

"அடியென்ருல் சரியான அடிதான், 'பொலீஸ் காரன் மகளி'ல் அவன் சகஸ்ரநாமம் விஜயகுமாரி யைப்போட்டு அடி அடியென்று அடித்தானே தெரி யுமா? அதுமாதிரித்தான் நடந்தது."

பத்திரிகை படிக்காதவர்களுக்கும் படிக்கத் தெரியாதவர்களுக்கும் செல்வராசன் சினிமா விமர்சக னுகவும் விளங்கிவருகிருன். பலர் அவனிடம் "இப் பொழுது ஓடுகிற படங்களில் எது நல்லது?" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப்பிராயம் கேட்பார்கள். அதற்கு அவன் ஓடுகிற படங்களில் நல்லதைச் சொல்லி அதிலுள்ள சிறப்பு அம்சங்களை விவரித்து, அது சென்னையில் எத்தனை வாரங்கள் ஓடின என்ற குறிப்புகளையும் கொடுத்து உதவுவான்.

பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் சினிமா ஒழிப்புப் பிரசாரம் செய்தபோதும், பிலிம் கட்டுப் பாட்டை இந்திய அரசாங்கம் மேற்கொண்டபோதும், அவைகளைக் கண்டித்து, சம்பந்தப்பட்டவர்களுக்குக் காரசாரமான நீண்ட கடிதங்களை முதலில் எழுதிய பெருமை நமது செல்வராசனுக்கே உண்டு.

இப்படியாக, சினிமாவே பேச்சாக, சினிமாவே மூச்சாக சினிமாவிலேயே ஊறித் திளைத்த செல்வராசனைச் சினிமாப் பித்தன் என்று அழைப்பதில் என்ன தவறிருக்கப்போகிறது?

"என்னகாணும் 'பாவைவிளக்கிலே' சிவாசி கணேசன் யோசித்து யோசித்து எழுதிக்கெண்டிருந்த மாதிரி ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறீர்களே!"

நிமிர்ந்து பார்த்தேன் "ஓ... நம்ம செல்வராசனு? வாருங்கள் வாருங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிப்போட் தயாரிப்பது எப்படி?

மாணவர்களால் மாணவர்களுக்காக நடாத்தப் படும் 'மாணவன் குரல்' பத்திரிகையில் 'றிப்போட்' தயாரிப்பது எப்படி? என்ற நூலுக்கு எழுதப்பட்ட மதிப்புரைதான் கீழேயுள்ளது:-

'ஆசிரியரை ஏமாற்றுவது எப்படி?' 'பாடசாலைக்குக் கள்ளம்பண்ணுவது எப்படி?' 'கொப்பி' அடிப்பது எப்படி?' முதலிய நூல்களை எழுதி ஏராளமான மாணவர்களது பெருமதிப்பைப் பெற்ற 'மாணவ நண்பன்' தான் 'றிப்போட் தயாரிப்பது எப்படி?' என்ற இந்த நூலையும் ஆக்கியுள்ளார். நூலாசிரியர் தனது அனுபவத்தையும் ஆராய்ச்சித் திறனையும் இதில் நன்கு கையாண்டிருப்பது பாராட்டத்தக்கது.

"பல மாணவர்கள் தங்கள் 'றிப்போட்' பத்திரத்தைப் பெற்றோர்களுக்குக் காட்டத் தயங்குவதையும், ஏதாவது காரணம் சொல்லிக் காட்டாது விட்டாலும் பாடசாலைத் தொடக்கத்தில் பெற்றோரின் கையொப்பத்துடன் ஆசிரியர்களிடம் இருப்பிக் கொடுக்க வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை அவர்களுக்குக் காத்திருப்பதையும் கண்டு மனம்பொறுக்காது இதை எழுதினேன்'' என ஆசிரியர் தனது முன்னுரையில் கூறியிருப்பது அவரின் இரக்க சிந்தையையும், மாணவர்கள் நலனில் அவருக்குள்ள அக்கறையையும் காட்டுகிறது.

இந்நூல் பத்து முக்கிய தலையங்கங்களாக வகுக்கப்பட்டுள்ளது. எல்லாத் தலையங்கங்களும் நன்ருக அமைந்திருப்பினும் 'றிப்போட் பெறுவது', 'பிறரைப்போல் எழுதுவது,' 'எழுத்தை அழிப்பது' முதலியன நூலுக்குச் சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளன.

'றிப்போட் பெறுவது' என்ற தலைப்பின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படுவது போன்ற 'றிப்போட்' டை ஒன்றும் எழுதாமலேயே புதிதாக (அதாவது அச்சு எழுத்துக்கள் மட்டும் உள்ளவை) அப்பாடசாலையிலிருந்து தந்திரமாகக் களவாடும் வழி கூறப்பட்டுள்ளது. இப்படியாகப் பெற்ற 'றிப்போட்' டை வைத்துக்கொண்டு 'பிறரைப்போல் எழுதுவது' என்பதன்கீழ் சொல்லப்பட்டிருப்பதைக் கையாண்டு ஒரு மாணவன் தானுகவே 'றிப்போட்' தயாரித்துப் பெற்ருேர்களை ஏமாற்றலாம். பின் பாடசாலையால் வழங்கப்பட்ட 'றிப்போட்'டில் பெற்ருேர்களின் கையொப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தைப் போடலாம். 'எழுத்தை அழிப்பது' என்னும் தலைப்புமூலம் 'றிப்போட்' களவாட முடியாதவர் களுக்கும் பிறரைப்போல் எழுத நன்கு கைவராதவர் களுக்கும் வழி கூறப்பட்டுள்ளது. எப்படியெனில், 'றிப்போட்' டிலுள்ள எண்களைமட்டும் அழித்துவிட்டு வேறு எண்களை எழுதிப் பெற்றோர்களுக்குக் காட்ட லாம். பின் அதை அழித்துவிட்டு பழைய எண்க ளையே மீண்டும் எழுதிப் பள்ளிக்கூடத்தில் கொடுக் கலாம்.

பல பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் தேர் வில் வெற்றி பெற்றால் போதாது; கூடிய புள்ளி களும் எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இதுதவிர அநேகமாகப் பிள்ளைகள் விடுமுறை நாட் களில் பெற்றோர்களிடமிருந்து அடி, உதை, திட்டுகள் வாங்காது தேர்வில் வெற்றிபெற்றதற்கான பரிசுகளை வாங்குவதும்; விடுமுறை நாட்களை உல்லா சமாகப் போக்குவதும் 'றிப்போட்டி' லேயே தங்கியி ருக்கிறது. இப்படியான பிரச்னைகளுக்குள் மாட்டிக் கொண்டு தவிக்கும் மாணவர்களுக்கு இந்நூல் தற்கா லிகமாகவேனும் உதவும் என்பது நமது நம்பிக்கை.

இந்நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள 'றிப்போட்' தயாரிப்பதற்கான பொருட்களின் பட்டியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளின் விலைகள், அவைகளைப் பெறக்கூடிய இடங்கள் ஆகியவை மாணவர்கள் இந்நூலை எழிதில் பின்பற்ற வழிகாட்டுகிறது.

இந்நூலில் ஆங்காங்கே காணப்படும் எழுத்துப்பிழைகளையும் சொற்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் மறுபதிப்பில் தவிர்க்க வேண்டுமா, வேண்டாமா என்பதை மாணவர்களின் முடிவிற்கே விட்டுவிடலாம்! மொத்தத்தில் இந்நூல் மாணவர்கள் கைகளில் தவருது இருக்கவேண்டிய ஓர் அரிய நூலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்துக்கேற்ற கோலம்போடும் கந்தையர்!

**நா**லுபேருக்கு முன்னே தாங்களும் ஏதாவது பேசவேண்டுமே என்பதற்காகச் சிலர் காலத்துக் கேற்ற கோலம் போடுவதுண்டு. இப்படியான கோலம் போடுவதில்—அதுவும் அழகாகப் போடுவதில் நமது கந்தையருக்கு நிகராக வேறு யாரையுமே சொல்ல முடியாது. இவர் தாம் ஏதோ தீர்க்கதரிசி போலவும் தமது சொல்லைக் கேட்காததால்தான் இந்த உலகமே இப்படிக் கெட்டுவிட்டது என்ற மாதிரியாகவும் பேசிக் கொள்வார்.

முன்பு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் கந்தையர் தாம் காணும் மனிதர்களிடமெல்லாம் அடிக்கடி "எங்கடை எம்பிமார் யூ. என். பி.யை எதிர்த்து வீழ்த்தியதுதான் தமிழர்களுக்கு ஏற்பட்ட இத்தனை தொல்லைகளுக்கும் காரணம். அவர்கள் மட்டும் ஆட்சிக்கு வந்தால் நாட்டிலே பாலும் தேனுமல்லவா பாய்ந்திருக்கும்?" என்று சொல்லி வந்தார்.

இவர் அந்நேரம் யூ. என். பி. பதவியில் இருந்தால் என்ன சொல்லியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கடை எம்பிமார் சுதந்திரக் கட்சியை எதிர்த்து வீழ்த்தியதுதான் தமிழர்களுக்கு ஏற்பட்ட இத்தனை தொல்லைகளுக்கும் காரணம். அவர்கள் மட்டும் ஆட்சிக்கு வந்தால் நாட்டிலே பாலும் தேனுமல்லவா பாய்ந்திருக்கும்?" என்றுதான் சொல்லித் திரிவார்.

முன்பு கந்தையர் அடிக்கடி என்னிடம் சொல்லிக்கொள்வார்: "இந்த அண்ணாத்துரை ஆக்கள் 'திராவிடநாடு' கொள்கையை மட்டும் கைவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமை இன்னும் எவ்வளவோ உயரும். அண்ணாத்துரை இதை இளப்பமாக எண்ணாமல் உடனே 'திராவிடநாடு' என்ற கொள்கையை மட்டும் கைவிடவேண்டும்."

இவரே நேற்று என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா? "அண்ணாத்துரை ஆக்கள் 'திராவிடநாடு' என்ற உயிர்க் கொள்கையைக் கைவிட்டது வெட்கங்கெட்ட செயல். அப்படியானால் இத்தனைகாலமும் 'திராவிடநாடு' என்று சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றிக்கொண்டுதானே வந்திருக்கிறார் இந்த அண்ணாத்துரை!" என்றார்.

இனி என்னுடைய சொந்த விடயத்துக்கு வருவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எஸ். எஸ். சி. சித்தியடைந்து வேலை தேடிக்கொண்டிருந்த காலத்தில் கந்தையர் என்மீது மிகவும் அனுதாபப்பட்டபடி "என்ன தம்பீ! தமிழ் எஸ். எஸ். சி. பாஸ்பண்ணி என்ன வேலையை எடுக்கிறது? இங்கிலீஸ் ஒரு பாடம் என்றாலும் பாஸ்பண்ணியிருந்தால் எனக்குத் தெரிந்தவர்களைப் பிடித்து ஒரு வேலையில் அமர்த்தியிருப்பேன்" என்று சொன்னார்.

நான் அடுத்த ஆடித் தேர்வில் ஆங்கிலம் சித்தியடைந்ததும் கந்தையர் மிகவும் கவலையுடன் "இங்கிலீஸ் ஒரு பாடம் பாஸ்பண்ணி என்ன செய்கிறது? இந்தமாதிரி எத்தனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா? எஸ். எஸ். சி.யை முழுவதும் இங்கிலீசில் எடுத்துப் பாஸ்பண்ணியிருந்தால் எனக்குத் தெரிந்தவர்களைப் பிடித்து ஒரு வேலையில் அமர்த்தியிருப்பேன்" என்றார்.

நான் இதன்பின் மிகுந்த சிரமம் எடுத்து எஸ். எஸ். சி. பரீட்சையை முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் எடுத்துச் சித்தியடைந்ததும் கந்தையர் அழாக்குறையாக "எப்படிப் பாஸ்பண்ணி என்ன தம்பி? உப்பிடி எத்தனை இலட்சம் பாஸ்பண்ணியிருக்குத் தெரியுமா? 'டைப் ரைட்டிங்' 'ஷோர்ட் ஹான்ட்' இவைகளும் பாஸ்பண்ணி இருந்தால் எனக்குத் தெரிந்தவர்களைப் பிடித்து ஒரு வேலையில் அமர்த்தியிருப்பேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே 'பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பது போல்' என்று சொல்லுவார்களே! அதுபோல் இந்தக் கந்தையரும் நடந்து முடிந்துவிட்ட சங்கதிகளைச் சொல்லித்தான் தமது தீர்க்கதரிசனத்தைக் காட்டிக் கொள்வார். 'கந்தையர் முன்பு என்ன சொன்னார்? அது இப்பொழுது சரியாகவா, தவறாகவா நடந்திருக்கிறது?' என்பதற்கு ஒருவருமே எழுத்துக் குறிப்பு வைத்திருக்காததால் மனிதன் பாடு வெற்றிப் பாதையை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கிறது. அதாவது நாலு பேருக்கு முன்னே அவரும் ஏதாவது சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்!

அதோ கந்தையர் வருகிறாரே!

நான் தட்டச்சு, சுருக்கெழுத்துப் படித்து கடந்த மார்கழியில் பரீட்சை எழுதியிருந்தேன். அந்த இரண்டு பாடங்களிலும் தேறியதற்கான மறுமொழி இன்றைய தபாலில்தான் வந்திருந்தது. அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, விவரத்தைக் கந்தையரிடம் கூறினேன்.

கந்தையர் கண்ணீர் விட்டபடி "தம்பீ! எஸ். எஸ். சி.யை எப்படித்தான் படித்து, எவ்வளவுதான் திறமையோடு, எத்தனைதான் அதிகமான பாடங்களைப் பாஸ்பண்ணினாலும் இந்தக் காலத்தில் வேலை எடுக்

கிறது முடியாத காரியம். பெரிய பட்டதாரிகளையே 'இங்கு வேலையில்லை' என்று முன்னைய கல்வி மந்திரி காஜலுக்குப் போகும்படி கூறியது உமக்குத் தெரியாதா? நீர் ஏதாவது பட்டம் பெற்றிருந்தீர் என்றால் எனக்குத் தெரிந்தவர்களைப் பிடித்து......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச ஆலோசகர்கள்!

இலவச ஆலோசகர்களாவது? அப்படி யார் ஐயா இருக்கிறார்கள்? வக்கீலிடம் ஆலோசனை கேட்ப தென்றால் பணம்! டாக்டரிடம் ஆலோசனை கேட்ப தென்றால் பணம்! இப்படி எங்கு பார்த்தாலும் எதற் கும் பணத்தை அளந்து கொட்ட வேண்டியிருக்கிற இந்த உலகத்திலா இந்தக் காலத்திலா இப்படியான ஆலோசகர்கள் இருக்கிறார்கள் என்று கேட்பீர்கள்.

நான் உண்மையாகத்தான் சொல்லுகிறேன். இந்த ஆலோசகர்கள் என்னைச் சுற்றியும் இருக்கிறார் கள். உங்களைச் சுற்றியும் இருக்கிறார்கள். ஏன் அதி கம் வளர்ப்பான், உலகத்திலுள்ள எல்லாரைச் சுற்றி யுமே இவர்கள் இருக்கிறார்கள்.

இந்த இலவச ஆலோசகர்கள் நமக்கு என்ன சம்பவங்கள் நிகழ்ந்தாலும் இலவச ஆலோசனைகள் சொல்லுவதற்காக நமது வீடுகளுக்கே வந்து போவார் கள். இதற்காக அவர்களுக்கு நாம் போக்கு வரத்துச் செலவுகூட கொடுக்கத் தேவையில்லை. இவர்கள் நமது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கு எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டுமென்றும் சொல்லுவார்கள். எந்த வழி யால் போவதென்று வழியும் காட்டுவார்கள். வண் டியிலா காரிலா சைக்கிளிலா நடந்தா போகவேண்டு மென்றும் சொல்லுவார்கள். பஸ்சிலானுல், எந்த பஸ் சில், எவ்வளவு பணம் கொடுத்து 'டிக்கட்' வாங்கிச் செல்லவேண்டும் என்றும் சொல்லுவார்கள்.

''என்ன ஐயா ஷேக்ஸ்பியரின் 'ஜுலியஸ் சீசர்' நாடகத்தில் வரும் மார்க் அன்ரனி பேசுவது மாதிரி விஷத்துக்கு வராமலேயே எங்களது ஆவலைத் தூண் டியபடி இருக்கிறீர்களே! சொல்லுவதைக் கெதியாகச் சொல்லிவிட்டுப் போங்களேன்! உங்களிடம் இலவச மாக ஆலோசனை கேட்பதாக எண்ணமா? பணம் கொடுத்துத்தான் புத்தகம் வாங்கியிருக்கிறோம் என் பது ஞாபகமிருக்கட்டும்'' என்கிறீர்களா?

இதோ சொல்லி விடுகிறேன். ஆனல் ஒன்று, இந்த இலவச ஆலோசகர்களால் எமக்கு நன்மைகளை விட தீமைகள்தான் அதிகம். உதவியிலும் பார்க்க உபத்திரவம்தான் அதிகம். பிரச்சினைகள் தீருவதற்குப் பதில் பிரச்சினைகள் மலைபோல் வளருவதுதான் பலன். தலையிடி தீருவதற்குப் பதில் தடுமாற்றம்தான் உண் டாகும்.

ஏன் அதிகம் போவான். நேற்று நடந்த ஒரு சம்பவத்தைத்தான் பார்ப்போமே! காலை உணவுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் என்ன காரணமோ தெரியவில்லை எனக்குக் கடுமையான வயிற்று வலி வந்து விட்டது. மிகுந்த வேதனைக்குப்பின் பெற்றோர்கள் செய்த ஒரு கைமருந்தால் வலி பறந்துவிட்டது. இதைத் தொடர்ந்து இந்த இலவச ஆலோசகர்கள் ஒருவர்பின் ஒருவ ராக எனது வீடு நோக்கிப் படை எடுக்கத் தொடங் கினார்கள். ஒவ்வொருவரும் எல்லாவற்றையும் நன்றாக விசாரித்துவிட்டு ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும் சிந்திவிட்டு ஆளுக்கொரு இலவச ஆலோசனையும் சொல்லிவிட்டுப் போனார்கள்.

"என்ன காரணமோ ஏதோ. படம் பிடித்துப் பார்த்து 'ஒப்பிறேசன்' ஏதாவது செய்ய வேண் டுமானால் செய்து போடுங்கோ. பிறகு பின்னை என்று இராமல் இப்பவே பெரியாசுப்பத்திரிக்கு ஓடுங் கோ..." என்றார் ஒருவர்.

" இளந்தாரி வயதிலே இப்படி வலியா? வாழுற பிள்ளை, கவனமாய்ப் பாக்கவேணும்! பெரியாசுப் பத்திரி இப்ப பெரியாசுப்பத்திரியாகவா கிடக்கு, அங்கை இத்தனை சனங்களுக்குள்ளை வடிவாய் பார்க்க மாட்டினம். 'பிறைவேற்' டாக்குத்தர் யாரிடமாவது காட்டுங்கள், சரியாய்ப் போய்விடும்..." என்றார் இன்னொருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உந்த இங்கிலீசு வைத்தியம் எப்ப வந்தது? எங்கடை காலத்திலெல்லாம் எந்த வைத்தியம் இருந்தது? எல்லாரும் கைவிட்ட நோயாளியையும் சில்லாலையான் காப்பாத்துவான்! நீங்கள் ஒருக்கால் அங்கை போங்கோ..." என்ருர் வேருெருவர்.

"பரமுவைத் தெரியாதா பரமுவை. அவர் ஒருதரம் கையைப் பிடித்ததும் எல்லாம் சொல்லுவார். என்ன வருத்தம், ஏன் வந்தது, எப்படி மாறும் என்று அவருக்குத்தான் தெரியும்..." என்ருர் இன்னும் ஒருவர்.

"உது ஒன்றுமில்லை. பெடியனுக்கு யாரோ மருந்து போட்டிருக்கினம். குடத்தனைக்குக் கொண்டு போய் மருந்தை விழுத்திஞல் எல்லாம் சரியாகிப் போம்..." என்ருள் ஒரு கிழவி.

"அவனுக்கு ஒரு மருந்தும் வேண்டாம் மந்திரமும்வேண்டாம். எதற்கும் ஒருக்கால் ஐயரிடம் கொண்டு போய் நூலும் கட்டி பார்வையும் பார்த்தால் எல்லாம் 'பக்' என்று பறந்து விடும்..." என்ருள் இன்னெருகிழவி.

இப்படி இன்னும் எத்தனையோ இலவச ஆலோசனைகள் கூறப்பட்டன. இதையெல்லாம் கேட்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க எனக்கும் பெற்ரோர்களுக்கும் தலையிடிதான் வந்தது. இவர்களில் யாருடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பது என்பது பற்றி இன்னும்தான் எங்களால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இப்பொழுது தெரிந்துவிட்டதா யார் இந்த இலவச ஆலோசகர்கள் என்று! என்ன இன்னுமா புரியவில்லை, எமது சொந்தக்காரர்கள், அயலவர்களைத் தான் குறிப்பிடுகிறேன்.

இந்த ஆலோசகர்களால் எந்த முடிவுக்கு வருவது என்ற தொல்லையை விட இன்னுமொரு தொல்லையும் உண்டு. நாம் யாராவது ஒருவருடைய ஆலோசனையைத்தானே கேட்க முடியும்? அப்படிக் கேட்டதும், அல்லது கேட்டு அதன்படி நடந்தால் ஏனைய அத்தனை பேர்களுக்கும் எம்மீது பொல்லாத கோபம் வந்துவிடும். "நாங்கள் சொன்ஞல் அவர்களுக்குப் பிடிக்காதாம். இன்ஞர் சொன்ஞல்தான் பிடிக்குமாம்" என்பார்கள்.

இந்த இலவச ஆலோசகர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுவதற்காகவே இவ்வளவும் எழுதினேன். இது என்னுடைய இலவச ஆலோசனை என்று அசட்டையாக இருந்துவிடாதீர்கள். பணத்திற்காகத்தான் இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறேன் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் அவதாரம் கனகம்மா!

எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு கிழவி இருக்கிறாள். கிழவி என்றால் சாதாரண கிழவி அல்ல; படு கிழவி என்றே சொல்லலாம். கனகம்மா என்பது தான் அவளது பெயர்.

இந்தப் பாட்டி, தான் ஒரு பெரிய கைராசிக்காரி என்பது போலவும் உலகத்தில் நடப்பதெல்லாம் ஏற்கனவே தான் அறிந்த சங்கதிதான் என்பது போலவும் காட்டிக்கொள்வாள். அதாவது சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், தான் ஒரு கடவுள் அவதாரம் அல்லது கடவுளின் அந்தரங்கக் காரியதரிசி என்பது அந்த அம்மாளின் எண்ணம்.

கனகம்மாவின் கணவர் கார்த்திகேசு மண்டையைப் போட்டுப் பத்தாண்டுகள் கழிந்துவிட்டன. அவள் வசிக்கும் காணியில் ஏராளமான தென்னை, தோடை, மா முதலிய மரங்களும் உண்டு. பல ஆண்டுகளாகப் பலன் தராது வீணே நிற்கும் தென்னைகளையும் சாப்பிட உதவாத புளித் தோடைகளையும் பட்டுப் போன இரண்டு மா மரங்களையும் "அவை அப்பு நட்டவை" என்றும் (அப்பு என்பது கனகம்மாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற கணவனையே!) தினமும் காய்த்துக் கொட்டும் தென்னைகளையும் இனிப்பான பழங்கள் தரும் தோடை மா மரங்களையும் "நான் நட்டவை" என்றும் தனது கைராசி பற்றி வருவோர் போவோரிடம் எல்லாம் அளந்து கொட்டுவதில் நமது கனகம்மாப் பாட்டிக்கு எல்லையில்லா மகிழ்ச்சி!

கனகம்மாப் பாட்டிக்கு ஐந்து பிள்ளைகளும் ஏராளமான பேரக் குழந்தைகளும் உண்டு. இந்த ஐந்து பிள்ளைகளில் இரண்டு பெண்களுக்கு வாய்த்த கணவன்மார் பெரிய குடிகாரர்கள். அந்தக் குடும்பத்திலே எப்போது பார்த்தாலும் அடி பிடி சண்டைதான்! அப்பொழுதெல்லாம் கனகம்மா தனது மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுக்கெல்லாம் பின்வருமாறு சொல்வாள்:

"நான் சொல்லச் சொல்ல, கொப்பு இந்த மாப்பிள்ளைகள் தான் வேண்டுமென்று ஒற்றைக்காலில் நிண்டார். இப்ப என்ரை பிள்ளைகள் படுகின்ற பாட்டை யாரிடம் சொல்லி அழுவது? என்ரை மற்றப் பிள்ளைகளுக்கு என்ரை மேற்பார்வையில்தான் கலியாணம் நடந்தது. அதிலை யாராவது ஒரு குறை சொல்ல முடியுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசு—அதாவது கனகம்மாப் பாட்டியின் கணவன் இருந்திருந்தால் தென்னை, தோடை, மா மரங்கள் நட்ட சங்கதிகளையும் குடிகாரக் கணவன்மார் வந்துசேர்ந்த வரலாறு பற்றியும் விவாதித்து முடிவுக்கு வரலாமென்றால், அவர்தான் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டனவே! அவர் இறக்குமுன் கனகம்மா இப்படி ஒன்றும் சொன்னதாகத் தெரியவில்லை என்று கார்த்திகேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

கனகம்மாவின் கைராசிக்குச் சில எடுத்துக்காட்டுகள் பார்த்தோம். இனி நடக்கப்போவதை முன்பே அறிந்துகொள்ளும் அவளது கடவுள் தன்மைக்குச் சில எடுத்துக்காட்டுகள்:

அந்த வட்டாரத்திலே யாராவது இறந்ததாக அறிந்தவுடன் கனகம்மாப் பாட்டி "இது நடக்குமென்று எனக்கு எப்போதோ தெரியும். சென்ற நாலைந்து நாட்களாக நான் பொல்லாத கனவுகள் கண்டேன். வெள்ளைக் குதிரையிலே ஆள் சவாரி செய்வதாகவும் கனவு கண்டேன்" என்று ஆரம்பித்து விடுவாள்.

இதுபோலவே, யாருக்காவது திருமணம் நிச்சயமானாலும், யாராவது 'பெரியபிள்ளை' யானாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராவது பயணத்திலிருந்து வந்தாலும், யாருடைய கடிதமாவது வந்தாலும் உடனே கனகம்மாப் பாட்டி இது தனக்கு ஏற்கனவே கனவுமூலமோ, கண் துடிப்பு மூலமோ, காக்கை அழுததன் மூலமோ தெரிந்துவிட்ட சங்கதியே என்று சாதித்துவிடுவாள்.

பாவம்! இந்தப் பாட்டி ஏனே தெரியவில்லை தனது தீர்க்கதரிசனத்தைச் சம்பவங்கள் நடைபெறு முன்பே ஒரு நாளேனும் சொல்லக்காணேம்; நடைபெற்ற பின்புதான் சொல்லித் தொலைக்கிருள்!

சிலருக்கு இந்தப் பாட்டி சொல்லுவதெல்லாம் வெறும் பொய்-ஏமாற்றுவேலை என்று நன்ருகத் தெரியும். இருந்தாலும் "பாவம்! வயது போன கிழவி சொல்லுவதைச் சொல்லிவிட்டுப் போகட்டும்" என்று வயதிற்கும் அநுபவத்திற்கும் மதிப்புக்கொடுத்துப் பேசாமல் இருந்துவிடுவார்கள். இதையே கிழவி தவறுதலாகப் புரிந்துகொண்டு, தான் சொல்லுவதை எல்லாம் 'சரி' என்று எல்லாரும் உணருகிருர்கள் என்றும், அதனுல்தான் தனக்கு ஒருவித எதிர்ப்பும் கிளம்புவதில்லை என்றும், தான் உண்மையிலேயே ஒரு 'கடவுள் அவதாரம்'தான் என்றும் எண்ணிக்கொண்டு, முன்னிலும் பார்க்கத் தனது 'கடவுள் தன்மை'யை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அதிகமாகவும் தீவிரமாகவும் காட்டிக்கொண்டிருக்கிருள்.

"என்ன தம்பி செய்துகொண்டிருக்கிருய்?"

நிமிர்ந்து பார்த்தேன் வேறுயாருமல்ல, நமது மதிப்பிற்குரிய கனகம்மாப் பாட்டியே வந்துகொண்டிருக்கிருள்.

"ஓ... நீங்களா? வாருங்கள். நான் ஆராய்ச்சிக் கட்டுரையொன்று எழுதிக்கொண்டிருக்கிறேன்."

"எனக்கு நல்லாய்த் தெரியும். நீ ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிப் பெயரும் புகழும் பெறுவாய் என்று! நீ பிறந்தபோதே இதை அப்புவுக்குச் சொல்லியிருக்கிறேன். பொய் என்ருல் கேட்டுத்தான் பாரேன். ஓ......மறந்துவிட்டேனே! அப்புதான் காலமாகி விட்டாரே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் செல்வனுடன் பேட்டி.

அஞ்சல் செல்வனை அறியாத தமிழ் மக்கள் இருக்கமுடியாது. எழுத்துத் துறையில் குறுகிய காலத்தில் முன்னேறிய இவர், ஏற்கனவே தான் பத்திரிகைகளில் கேட்ட இருநூறு கேள்விகளையும், அதற்கு அளிக்கப்பட்ட பதில்களையும் தொகுத்து நூலாக வெளியிட்டதை வாசகர்கள் அறிவார்கள். இவர் இப்பொழுதும் நூல் ஒன்று வெளியிடுவதாக அறிந்து அவரிடம் பேட்டிகாணச் சென்றேன். நான் சென்றபோது இவர் அஞ்சலட்டைகளுக்குமுன் கையில் பேனுவுடன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். என்னைக் கண்டதும் அவர் அத்தனை அலுவல்களுக்கிடையிலும் பச்சைத்தண்ணீர் தந்து வரவேற்றுச் சிரமம் பாராது பேட்டி தந்தார். அன்னாரிடம் நான் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் தந்த பதில்களும் அடியில் காணப்படுகின்றன:-

கே:- நீங்கள் ஏதோ நூல் வெளியிடப்போவதாக அறிந்தேன்; உண்மைதானு?

ப:- ஆம். நான் இதுவரை பல பத்திரிகைகளில் எழுதிய நூறு அஞ்சல்களைத் தொகுத்து, நூலாக்கி ளியிடப்போகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.- இதுவும் ஒரு புது முயற்சிதான் அல்லவா?

ப:- என்ன புது முயற்சி! நேரு இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்களும், அண்ணாத்துரை 'திராவிட நாடு' பத்திரிகையில் 'தம்பிக்கு' எழுதிய கடிதங்களும் நூலாக வந்திருக்கின்றனவே! தெரியாதா உங்களுக்கு?

கே:- அவைகளையெல்லாம் நீங்கள் படித்ததுண்டா?

ப:- படித்ததில்லை; கேள்விப்பட்டதுண்டு!

கே:- உங்களுடைய படைப்புகள் எந்தெந்தப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன?

ப:- தமிழகத்திலும் ஈழத்திலுமுள்ள சுமார் இருபது பத்திரிகைகளில்!

கே:- இவ்வளவு பத்திரிகைகளையும் நீங்கள் வாங்கிவருகிறீர்களா?

ப:- நண்பர்களிடமிருந்து எனது படைப்புகள் வெளிவந்த 'பக்கங்'களை வாங்குவேன். நூல் நிலையங்களில் களவாக இப்பகுதிகளை வெட்டி எடுப்பதும் உண்டு!

கே:- நீங்கள் பத்திரிகைகளில் விரும்பிப் படிக்கும் பகுதிகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப:- கேள்வி -பதில்கள், கடிதங்கள், விளம்பரங்கள்!

கே:- சிறுகதை, நாவல், கட்டுரைகள், கவிதைகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:- சிறுகதை சிறுவர்களையும், நாவல் பெரியவர்களையும் கெடுத்துவருகிறது. கட்டுரை, கவிதைகள் என்பன ஒருவருக்கும் புரியாதன. கேள்வி பதில், கடிதங்கள், விளம்பரங்கள்தான் மக்களுக்கு நன்மை தருவன!

கே:- நீங்கள் எத்தனை துறைகளில் எழுத்துப் பணி புரிகிறீர்கள்?

ப:- கலை, இலக்கியம், அரசியல் ஆகிய முத்துறைகளிலும்!

கே:- அஞ்சல்துறை வளர என்ன செய்தல் வேண்டும்?

ப:- பத்திரிகைகள் 'ஆசிரியருக்குக் கடிதம்' எழுதுபவர்களின் முழு முகவரிகளையும் தெளிவாக வெளியிடவேண்டும், வாசகர்கள் 'அஞ்சல்களை' மட்டும் படித்தால் போதாது. அவைகளை எழுதியவர்களையும் ஒன்றாகக் கவனித்துப் படிக்கவேண்டும். பத்திரிகைகள் பிரசுரமாகும் அஞ்சல்களை எழுதிய ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கும் அந்தப் பத்திரிகையின் ஒரு பிரதியை இலவச மாக அனுப்பவேண்டும். அத்துடன் பிரசுரமாகும் அஞ் சல்களுக்குத் தகுதியறிந்து சன்மானங்களும் வழங்கப் படல்வேண்டும்!

கே:- நீங்கள் 'கலை' சம்பந்தமாக எழுதிய முதல் அஞ்சல் என்ன?

ப:- கன்னடத்துப் பைங்கிளி சரோசாதேவி யின் கவர்ச்சிப் படங்களை ஒவ்வொரு இதழிலும் வெளி யிடுமாறு மன்ருடி ஒரு சினிமாப் பத்திரிகைக்கு எழுதி யது!

கே:- 'இலக்கியம்' சம்பந்தமாக எழுதிய முதல் அஞ்சல்?

ப:- 'சென்ற இதழில் ஏகாம்பரம் எழுதிய மல் லிகைப் பந்தல் என்ற சிறுகதை மிக மிகச் சிறப்பாயிருந் தது. இதுபோன்ற கதைகளைத் தொடர்ந்து வெளி யிட்டு வரவும்' என்ற ஓர் அஞ்சலாகும்!

கே:- மன்னிக்கவும், நீங்கள் தான் சிறுகதைகள் படிப்பதில்லை என்றீர்களே?

ப:- இப்படியான அஞ்சல் எழுத சிறுகதை யைப் படித்துத்தான் ஆகவேண்டும் என்று உங்களுக்கு யார் சொன்னது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே:- 'அரசியல்' சம்பந்தமான முதல் அஞ்சல்...?

ப:- 'பொதுமக்களும் தேர்தலும்' என்னும் ஒரு தினசரியில் பிரசுரமாகிய அஞ்சலாகும்!

கே:- நீங்கள் எழுதிய மிக நீண்ட அஞ்சலைச் சொல்லமுடியுமா?

ப:- 'பொதுமக்களும் தேர்தலும்' என்பதே யான் எழுதிய நீண்ட அஞ்சலாகும். மடையன் தொப்பிப் பேப்பரில் (Fool's cap paper) சுமார் ஒரு பக்கம் அளவுக்கு எழுதியதாகும்.

கே:- உங்களைக் கவர்ந்த எழுத்தாளர்களையும் உங்களது வழிகாட்டிகளையும் கூறமுடியுமா?

ப:- எவருமிலர்; எல்லாம் நானே!

கே:- தங்களது இலட்சியம்...?

ப:- தமிழ்மக்களுக்கு என்னால் முடிந்தவரை எழுத்துப்பணி புரிவது!

கே:- நீங்கள் எழுத்தைமட்டும்தான் நம்பி வாழுகிறீர்களா?

ப:- ஈழத்து எழுத்தாளர்கள் எழுத்தைமட்டும் நம்பி வாழமுடியாது என்பதற்கு நான் மட்டும் விதிவிலக்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே:- நீங்கள் முன்பு வெளியிட்ட 'கேள்வி-பதில்' என்ற நூலின் கதியை அறியலாமா?

ப:- அதுபற்றி ஒன்றும் நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றைமட்டும் நீங்கள் நினைவில் வைத்திருங்கள். எனக்கு பணத்திலும் இலட்சியமே (புகழ்) பெரிது. கேவலம் நான் பணத்துக்காக எழுத்துப்பணி புரியும் கூட்டத்தைச் சேர்ந்தவனல்லன்!

இத்துடன் நான் எனது பேட்டியை முடித்துக் கொண்டு அஞ்சல் செல்வனுக்கு நன்றி கூறிவிட்டு வெளியேற எழுந்தேன். அவர் என்னைத் தடுத்து இந்தப் பேட்டி வெளிவரும் பத்திரிகையின் ஒரு பிரதியை தனக்கு அனுப்பிவைக்கும்படியும், தனது படத்தையும் பேட்டியுடன் வெளியிடுமாறும் கூறி தனது புகைப்பட 'புளக்' ஒன்றையும் என்னிடம் திணித்தார்.

— : : : —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதாத எழுத்தாளன் எழிலன்!

"எழுதுவதென்பது அப்படி ஒன்றும் பாரதூரமான காரியமில்லை. நாலு புத்தகத்தை வாசித்துவிட்டு, அதிலை ஒரு நுள்ளு, இதிலை ஒரு கிள்ளு, அடுத்ததிலை ஓர் அள்ளு இப்படியாக எடுத்தெடுத்து எழுதிவிட்டுக் கையெழுத்தைப் போடவேண்டியதுதான், எழுத்தாளனாகிவிடலாம்.

இப்படியில்லாவிட்டால் அவன் பேசுவது, இவன் பேசுவது, அங்கை நடப்பது, இங்கை நடப்பது இப்படியான சம்பவங்களையெல்லாம் செருகி கதை கட்டுவது பெரியகாரியமோ?

சுருக்கமாகச் சொல்லுவதாயிருந்தால் சைக்கிள் கடை மணியத்தின் வேலையைப் போலத்தான் இந்த எழுத்தாளர்களின் வேலையும்! அவனும் ஊர் ஊராகத் திரிந்து ஒரு 'பார்' எடுத்திட்டால் போதும். பிறகு அங்கை ஒரு சில்லு, இங்கை ஒரு சில்லு, அடுத்தவீட்டிலை ஒரு 'மட்காட்,' எதிர் வீட்டிலை ஒரு 'செயின் கவர்' இப்படியாகச் சேர்த்து ஒரு சைக்கிள் செய்துவிடுவான்.

இது தெரியாமல் இந்த எழுத்தாளர்கள் எல்லாரும் தலைகால் தெரியாமல் திரிவதும், அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் கடவுளைக் கண்டதுமாதிரிப் போற்றித் திரி வதும் அர்த்தமற்றது.

இன்னும் சிலர் 'பேப்பரிலை' எழுதினால்தான் எழுத்தாளன் என்று சொல்லுகிறார்கள். இது சரியான முட்டாள்தனம். நானும் அந்தக்காலத்தில் ஏராளமாக எழுதியிருக்கிறேன். ஆனால் ஒன்றுகூடப் பேப்பரிலை வரவில்லை; பேப்பருக்கு அனுப்பியதுமில்லை. அப்படி யானால் என்னை எழுத்தாளன் இல்லையென்று சொல் லுவது?

எழுத்தாளர்களுக்கெல்லாம் பத்திரிகை அலு வலகங்களில் பழக்கமான ஒருவரேனும் இருப்பார். அவரின்றி ஓர் அணுவும் அசையாது. எங்களுக்கும் அப்படி யாராவது இருந்தால் நாங்களும்தான் ஏராள மாக எழுதலாம்.

அங்கை பாருங்கோ அவையளும் 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். படித்தவன் பாட்டைக்கெடுத் தான்' என்பதுபோல் ஏதேதோ பத்திரிகைகளில் எல்லாம் எழுதுகிறவையாம். எழுதட்டும், ஆனால் நான் பேசிறதை எல்லாம் கேட்டுவிட்டு அதையுங்கூட எழு திப்போடுவினம் என்றுதான் பயமாயிருக்கு."

மேற்படி சத்தான வார்த்தைகளையெல்லாம் தனது முத்தான வாயால் அடிக்கடி உதிர்த்துவிடுபவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எழிலன். அவன் எங்களூர் நூல்நிலையத்தின் பொறுப்பாளன். நூல்நிலையத்தில் யாராவது எழுத்தாளனும் இருந்து வேறு பலரும் கூடியிருந்தால் இப்படியான வசனங்களை அவிழ்த்துவிடுவான்.

எழிலன் நூல்நிலையத்தின் பொறுப்பாளனே தவிர அவ்வளவாக நூலறிவு நிரம்பியவனல்ல. அவன் எழுதுவது ஒரு திறமை என்பதையோ, எழுத்தாளன் என்பவன் ஓர் உயர்ந்த பிறவி என்பதையோ இலேசில் ஒப்புக்கொள்ளமாட்டான். தன்னுல் முடியாத ஒரு கலை—தன்னுல் நுழையமுடியாத ஒரு துறை எப்பொழுதும் 'மகா மட்டமானதே' என்பது அவனது எண்ணம்.

இரண்டொரு எழுத்தாளர்கள் அந்த நூல்நிலையத்தில் அடிக்கடி புத்தகங்கள் எடுப்பதை வைத்துக் கொண்டு எழுத்தாளர்கள் புத்தகங்களைப் பார்த்துத் தான் எழுதுகிருர்கள் என்றும் தனது நூல்நிலையமும் தானும் இல்லாவிட்டால் அந்த எழுத்தாளர்கள் எழுதவே முடியாது என்றும் உண்மையாகவே எழிலன் எண்ணிக்கொண்டிருக்கிருன்.

பத்திரிகையில் எழுதுவதற்குத் தகுதி தேவையில்லை; எப்படியும் எழுதலாம்; எதையும் எழுதலாம். ஆனுல் அது பிரசுரமாவதற்குப் பத்திரிகை அலுவல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்களில் பழக்கமான யாராவது ஒருவரேனும் இருந்தே ஆகவேண்டும் என்பதும் எழிலனின் எண்ணம்.

முடிவாக எழிலன் "உண்மையான எழுத்தாள னென்றால் அவன் எழுதமாட்டான். இப்படியாக யோசித்தபடிதான் இருப்பான். எப்போதாவதுதான் எழுதுவான். அதையும் பத்திரிகை ஒன்றுக்கும் அனுப்ப மாட்டான்" என்று நிமிர்ந்து கைகட்டியவாறு சொல்லு வான்.

தன்னால் முடியாத ஒன்று மற்றவர்களால் முடி வதைப் பொறுக்கமாட்டாத எழிலனிடம் நூல்களிலி ருந்து எடுத்து எழுதுவது திருட்டென்றும், திருடி எழுதி னல் கண்டுபிடிக்கப்பட்டு அவமானப்படவேண்டும் என்றும், நீ ஏதாவது கதை, கட்டுரை எழுதித் தா எப்படி இருக்கிறது பார்ப்போம் என்றும், யாராவது கூறினல் அதற்கெல்லாம்கூட விதண்டாவாதமான பதில்கள் சொல்லுவான்.

நேற்றைய தினம் இந்த எழுதாத எழுத்தாளன் பலர் மத்தியில் வலிந்து கதைக்கப்போய் சரியாக மாட்டிக்கொண்டான்.

நூல்நிலையத்தில் நான் 'திருவாசகம்' என்ற நூலே எடுத்துக்கொண்டு வெளியே வந்ததும், "திருவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகம் போகிறது. இனி இதிலிருந்து கதை கட்டுரைகள் எல்லாம் தயாரிப்பார்'' என்ருன் எழிலன்.

உடனே அங்குநின்ற பலர் ''சிறுகதைகளும் நகைச்சுவைக் கட்டுரைகளும்தானே அவர் எழுதிவருகிருர். சிறுகதைகளும் நகைச்சுவைக் கட்டுரைகளும் திருவாசகத்திலிருந்து எப்படி எடுத்து எழுதுவதாம்? அப்படித்தான் எடுத்து எழுதிஞலும் போயும் போயும் பொலீஸ் நிலையத்தில் களவெடுத்த கதையாகவல்லவா முடியும்'' என்று எழிலனுடன் காரசாரமான விவாதம் தொடங்கிவிட்டனர்.

இறுதியில் எழிலன் தனது தோல்வியைத் தற்காலிகமாக ஒப்புக்கொண்டான். ''ஏதோ எழுதுங்கோ. எழுதுவதில் குறை ஒன்றுமில்லை. படிப்படியாகத்தான் வளரவேண்டும். முதலில்அறையில் ஆடித்தான் பிறகு அம்பலத்தில் ஆடவேண்டும்'' என்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி இன்றிருந்தால்.....!

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமான மாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்று பாரதி பாடி வைத்தாலும் வைத்தார். அதனால் இந்த ஆண் வர்க் கத்திற்கும் உலகத்திற்கும் ஏற்பட்ட ஆபத்துக்கள் சொல்லி முடியாது.

முன்னெல்லாம், கடைகளுக்கு (கூப்பன் கடை களையும் பலசரக்குக் கடைகளையும் நான் இங்கு குறிப் பிடவில்லை) ஆண்கள்தான் போவார்கள். ஆனால் இந்தப் பாரதி "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்று பாடிய பின் பெண்களெல்லாம் அடிக்கடி "ஷொப்பிங் ஷொப் பிங்" என்று ஆண்களுக்குச் சரிநிகராக அல்ல, ஆண் களோடு சரி இரண்டு மடங்கினராக கடைகளை முற்று கையிட்டு வருகிறார்கள்.

முன்னெல்லாம் பஸ் வண்டிகளில் பெண்களுக் காக ஒதுக்கப்பட்ட பகுதிகளில்கூட இரண்டொரு பெண்கள்தான் பிரயாணம் செய்வார்கள். ஆனால் "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வம் இந்த நாட்டிலே" என்று பாரதி பாடியபின் இப்பொழுதெல்லாம் பஸ்சின் அரைவாசிக்கு மேற்பட்ட ஆசனங்களே பெண்களுக்குத்தான் தேவைப்படு கிறது. புகைவண்டியிலும் இதே கதைதான்.

முன்னெல்லாம், 'உத்தியோகம் புருஷ லட் சணம்' என்றுசொல்லி ஆண்களே உத்தியோக நாற் காலிகளில் அமர்ந்திருப்பார்கள். ஆனல் "ஆண்க ளோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்று பாரதி பாடியபின் ஆண்க ளது உத்தியோகங்களுக்குப் பெண்களும் போட்டி போட வந்துவிட்டார்கள்.

இத்துடன் நின்றுவிடவில்லை இந்தப் பாரதியால் வந்த கொடுமை. இந்தப்பாட்டு எமது 'இலங்கைப் போக்குவரத்துச் சபை'யின் காதுகளிலும் விழுந்து இனிமேல் பெண்களும் பஸ் கொண்டக்டர்களாக நிய மிக்கப்பட இருப்பதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இப்படி எங்கு பார்த்தாலும் - அதாவது சைக் கிள் ஓடுவது, கார் ஓட்டுவது, சேட் போடுவது, சினிமா பார்ப்பது (அடல்ற்ஸ் ஒன்லி உட்பட) எல்லா வற்றிலுமே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்கிருர்கள் இந்த நாட்டிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் வழக்கம் இன்று இல்லை. அவளை வீட்டுக்குள் மட்டுமல்ல சமைய லறை விருந்தைகளிலும்கூட இன்று காணக் கிடைப்ப தில்லை. அவள்தான் பஸ்சிலும் ஆபீசிலும் 'ஷொப்பிங்' கிலுமாகத் திரிகிறாளே!

இனி இந்த ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதால் ஏற்படும் தொல்லைகளைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

பெண்கள் கடைகளை முற்றுகையிடுவதால் இந்த ஆண்களைக் கடைக்காரர்கள் யாரும் கவனிப்ப தில்லை. அவர்கள் சினிமா நடிகைகளின் கணவர்கள் போல் (நடிகக் கணவர்களல்ல) ஓரிடத்தில் ஒதுங்கி நிற்கவேண்டியிருக்கிறது. இந்தக் கடைக்காரர்களா வது தங்களது வர்க்கமென்று பார்க்காவிட்டாலும் 'பெண்களைவிட ஆண்கள் கெதியில் வாங்குவதை வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். பெண்களைப் போலில்லாது ஆண்கள் ஏதோ கட்டாயம் வாங்கத் தான் வருபவர்கள், பெண்களைப்போலல்லாது ஆண் கள் கூட்டத்துடனின்றித் தனித்தனியாக வருவார்கள்' என்பனவைகளையாவது புரிந்துகொண்டு ஆண்களுக் குக் கருணை காட்டக் கூடாதா?

பஸ் வண்டிகளையும் புகைவண்டிகளையும் பெண் கள் தமது உடமைகளாக்கியபின் இந்த அப்பாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களெல்லாம் நின்று பிரயாணம் செய்யவேண்டிய நிலையிலும், வண்டி கிடைக்காத நிலையிலுமாகக் கிடந்து தவிக்கிறார்கள்.

பெண்கள் உத்தியோகம் பார்க்கக் கிளம்பியதும் பெண்களோடு ஆண்களும் உத்தியோகங்களுக்கு மனுப் போட்டாலும் இந்த முதலாளிமார்கள் பெண்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். காரணம் கேட்டால் பெண்கள் இருந்தால் பொதுமக்களைக் கூடுதலாகக் கவரமுடியும் என்றும், அலுவலகத்துக்கும் ஓர் அழகாய் இருக்குமென்றும் சொல்லுகிறார்கள்.

பஸ்களில் பெண் கொண்டக்டர்களை நியமிக்கும் திட்டத்துக்கு வருவோம். இதனால் ஏதோ சில பெண்கள்தான் பயனடையப்போகிறார்கள், ஆண்களுக்கு அப்படி ஒன்றும் பாரதூரமான வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாது என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், அது தவறு.

பெண்கள் கொண்டக்டர்களாக அமர்த்தப்பட்டதும் பஸ் டிரைவர்கள் பஸ்சுக்குப் பின்னால் வரும் வாகனங்களைக் கவனிப்பதற்காக தமக்குமுன் வைக்கப்பட்டுள்ள கண்ணாடியைச் சிறிது திசை திருப்பி விட்டு, அதையே பார்த்துக்கொண்டு பாதையைப் பார்க்காமல் வண்டியைச் செலுத்துவார்கள். இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல விபத்துக்கள் ஏற்பட, பெண் கொண்டக்டர்கள் உள்ள பஸ்களில் ஆண் டிறைவர்கள் இருக்கக்கூடா தென்றும் அப்படி இருந்தால் டிறைவர்கள் கொண்டக் டர்களையே பார்த்துக்கொண்டு விபத்துகளில் சிக்கி விடுவார்கள் என்றும் இ. போ. ச. முடிவுக்கு வரும். அதன்பிறகு பெண் கொண்டக்டர்கள் உள்ள பஸ்க ளில் பெண் டிறைவர்களும் நியமிக்கப்படுவார்கள்.

இத்துடன் தொல்லைகள் தீர்ந்தன என்று நினைத்துவிடாதீர்கள். பெண் டிறைவர் கொண்டக்டர் கள் நியமிக்கப்பட்ட பஸ்களிலே ஏராளமானவர்கள் முக்கியமாக வாலிபர்கள் முண்டியடித்துக்கொண்டு ஏறுவார்கள். சைக்கிள், கார்களில் பிரயாணம் செய்த வர்கள்கூட அந்த பஸ்களிலேதான் பிரயாணம் செய் வார்கள்...

நல்லதாயிற்றே. அப்படியே ஆண்கள் பணி புரியும் பஸ்களில் பெண்களும் பிரயாணம் செய்தால் தொல்லைகள் தொலைந்தன என்கிறீர்களா? அதுதான் நடக்காது. 'டிறைவர் என்ன புடைவை கட்டியிருக்கி ருள். கொண்டக்டர் என்னமாதிரி 'ஜாக்கட்' அணிந் திருக்கிருள். டிறைவரின் புடைவையும் 'ஜாக்கட்'டும் 'மாச்' ஆகிறதா? கொண்டக்டர் கொண்டை கட்டியிருக் கிருளா அல்லது பின்னல் விட்டிருக்கிருளா?' என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகளையெல்லாம் அறிந்துகொள்ளும் எண்ணம் பாவம், அவர்களுக்கு இருக்குமல்லவா?

இதனால் ஆண்கள் பணிபுரியும் பஸ்களெல்லாம் வெறும் பஸ்சாக ஓடித்திரியும். உடனே பெண் ஊழியர்களால் இ. போ. ச. இலாபம் காட்டுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு எல்லா பஸ்களிலுமே பெண் டிறைவர்களும் கொண்டக்டர்களும் நியமிக்கப்படுவார் கள். அதன் பிறகு......

வேண்டாம், அதை நான் சொல்ல விரும்ப வில்லை. சொன்னால் ஆண்களெல்லாம்—அதிலும் முக் கியமாக இ. போ. ச. ஊழியர்களெல்லாம் மயக்கம் போட்டு விழுந்து விடுவார்கள்.

சுருக்கமாக, பாரதி "ஆண்களோடு பெண்க ளும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்று பாடியதால் ஆண்களை குடும்பக்கலையும் குழந்தை வளர்ப்புக் கலையும் கற்கும்படி வைத்துவிட் டார். அப்படியான நிலை இதுவரை வராத ஆண்களுக்கு அந்த நிலை வரும் காலம் வெகு தூரத்தில் இல்லை என் பதைச் சொல்லி வைக்கிறேன்.

எனவே, பாரதி இன்றிருந்தால் இந்த ஆண்க ளெல்லாம் அகப்பையும் அடுப்படியுமாக இருந்து அனு பவிக்கும் அல்லல்களையும், குழந்தைகளோடு அனுப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கும் கும்மாளங்களையும் கண்டு இரத்தக் கண்ணீர் வடிப்பார். "நுண்ணறிவுடையராகி நூலொடு பழகி னும் பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்து" "பெண் என்னும் மாயப் பைசாசம்" என்றெல்லாம் தமக்கு முன் வந்தோர் தீர்க்கதரிசனமாகவும் அனுபவ பூர்வமாகவும் கூறியதை எல்லாம் புறக்கணித்ததை எண்ணி எண்ணித் தனது அறியாமையையிட்டு வருந்துவார்.

அதன்பின், "பெண்களோடு ஆண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்றும் "வீட்டுக்குள்ளே ஆணைப் பூட்டிவைப் போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்" என்றும் ஆண்கள் விடுதலைபற்றிப் பாடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் படித்துக் கிழித்த கதை.

"அந்த ஆசிரியர் அடிக்கமாட்டார். மாணவர்களுக்குத் தொல்லை கொடுக்கமாட்டார். பிட்டு, சோறு, பாண் என்று திரும்பத் திரும்ப ஒரே சுவையையே சுவைத்து அலுத்த நாவுக்கு இடைவேளையின்போது நல்ல சுவையான கடலை வடை கிடைக்கும்"

இவைதான் என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதற்குத் துணை நின்றவை. இல்லாவிட்டால் ஏடு தொடக்கிய அன்றே 'ஏட்டுப் படிப்பு வாழ்க்கைக்கு உதவாது' என்ற முடிவுக்கு வந்திருப்பேன். மழைக்குக்கூட பாடசாலையில் ஒதுங்கியிருக்க மாட்டேன். அரிச்சுவடிகூடப் படித்திருக்கமாட்டேன். இது போன்ற கதை எழுதி உங்களது பொறுமையையும் எனது மையையும் வீணடித்திருக்கவும் மாட்டேன்.

'அவ்வாறு பாடசாலைக்குப் போகாமலும் படிக்காமலும் இருக்கப் பெற்ருேர்கள் சும்மா இருந்துவிடுவார்களா? முதுகில் மூன்று போட்டு அனுப்பமாட்டார்களா?' என்று கேட்கப்படலாம். ஆனுல் உண்மையைச் சொல்லுகிறேன், அப்படி எனது பெற்ருேர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமே செய்திருக்கமாட்டார்கள். எனது விருப்பமே அவர்களது விருப்பமும். நான் மறுத்தால் அவர்கள் அதற்கு மறுவார்த்தையே பேசமாட்டார்கள். அவர்களுக்கு நான் அவ்வளவு செல்லம். அத்துடன் அவர்களுக்குப் 'பரணி'யில் பிறந்த நான் தரணி ஆழ்வேன் என்றும், அதற்குப் படித்துத்தான் ஆகவேண்டும் என்ற நியதியில்லையென்றும் மிக நன்ருகத் தெரியும்.

**படித்துக் கிழித்தேன்.**

ஏடு தொடக்கிய தமிழ்ப் பாடசாலையிலேயே நாலாம் வகுப்புவரை படித்துக் கிழித்தேன். கிழிக்கிற தென்ருல் புரியவில்லையா? சின்ன வகுப்புப் பிள்ளைகளைப் பாருங்கள், புரியும். அவர்கள் ஒரு வகுப்பில் ஒரே புத்தகத்தை எத்தனை முறைகள் வாங்குகிருர்கள் தெரியுமா? படிக்கிறதும் கிழிக்கிறதும், படிக்கிறதும் கிழிக்கிறதுமாக இருப்பார்கள். அப்படித்தான் நானும் படித்துக் கிழித்தேன். வடையிலுள்ள எண்ணெயை அகற்றவா? புத்தகத்திலேதான் பேப்பர் கிழிப்பேன். மாங்காய் சாப்பிட மிளகாய்த் தூளும் உப்பும் கொண்டு போகவா? புத்தகத்திலேதான் பேப்பர் கிழிப்பேன். வாங்கிலேயுள்ள காக்கை எச்சத்தை துடைக்கவேண்டுமா? புத்தகத்திலேதான் பேப்பர் கிழிப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாலாம் வகுப்புவரை எப்படித் தங்கு தடையின்றிப் போனேன் என்பது எனக்கு அப்பொழுது எட்டாவது அதிசயமாகத்தான் இருந்தது. படிப்பிலோ மிகவும் குறைவு. பாடசாலை நாட்களில் மூன்றில் ஒரு பகுதி நாட்களையோ மாங்காய், புளியங்காய், மிளகாய்த்தூள், உப்புச் சாப்பிட்டு வந்த வியாதி காரணமாக வீட்டிலே கழித்திருப்பேன். அப்படி இருந்துமா இப்படி? பிறகுதான் உண்மை தெரிந்தது. எனது அப்பா மாமா முதலியோர் பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். அவர்களது உதவி அந்தப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடையிடை அதிகமாகத் தேவைப்படுவதுண்டாம். அதனால்தான் அந்த ஆசிரியர்கள் என்னையும் கவனித்திருக்கிறார்கள். எப்படியென்றாலும் அவர்கள் உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்வார்களா, என்ன?

**சுத்தம்**
**சுகம் தரும்.**

ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில்தான் ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். சி. வரை படித்து முடித்தேன். ஆங்கிலப் பள்ளிக்கூடம் சென்ற என்னை மிகவும் கவர்ந்த பாடம் 'சுத்தம் துப்புரவு எல்லாருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் அவசியம்' என்று ஆசிரியர் ஒருவர் சொல்லிக் கொடுத்த பாடமேயாகும்!

ஒவ்வொரு ஆண்டு தொடங்கியதும் முதல் வாரத்தில் ஆசிரியர்கள் புத்தகங்கள் கொப்பிகளின் பட்டியலைத் தருவதும் போதனைகள் சொல்லுவதிலும் தானே ஈடுபடுவார்கள். அடுத்த இரண்டு வாரங்களிலும் புத்தகங்கள் கொப்பிகளைத் தேடித் தேடி வாங்குவதற்காக அவர்கள் பாடங்களைத் தொடங்காமலேயே இருப்பார்கள், அதற்கு அடுத்த வாரத்தில் பாடங்கள் தொடங்கப்பட்டு விட்டாலும்கூட நான் வீட்டிலே படிக்கமாட்டேன். எனது புத்தகங்கள் கொப்பிகளுக்கு அழகான விலையுயர்ந்த தாள் வாங்கி உறை போடுவதிலும், உறையிலே எனது பெயர், வகுப்பு, பாடங்கள் முதலியன அழகாக எழுதப்பட்ட தாளை ஒட்டுவதிலுமாகச் செலவிடுவேன். தண்ணீர்ப் படங்களுக்கும் வண்ண வேலைப்பாடுகளுக்கும்கூட இவைகளில் தகுந்த இடமளிப்பேன்.

பாடசாலையில் கொடுக்கப்படும் எல்லாப் பாடக் குறிப்புகளையும் ஒரு கொப்பியிலேயே எழுதுவேன். பின் வீட்டிலேதான் அந்தக் குறிப்புகளை அந்தந்தப் பாடங்களுக்குரிய கொப்பிகளில் அழகாக அச்செழுத்துப்போல்—அவசியமான இடங்களில் சிவப்பு நீலக் கோடுகளும் போட்டு எழுதுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் துப்புரவான வேலேகள் எனது பெற்றேர்களே மட்டுமல்ல ஆசிரியர்களேயும் மிக மிகக் கவர்ந்துவிடும். இது ஒன்றிற்காகவே நான் என்ன தவறுகள் செய்தாலும் அவர்கள் என்னே மன்னிக்கத் தயாராக இருந்தார்கள்.

இப்படியான வேலேகளால் எனக்குப் படிக்கவே நேரமில்லாமல் இருந்தது. விடுதலே காலங்களில் படிக்கும்படி பெற்றேர்கள் வற்புறுத்துவார்கள். உடனே நான் "விடுதலேயில் படிப்பதா? அப்படியானுல் எதற்காக விடுதலே விடுவான்? எந்த உழைப்புக்கும் ஓய்வு அவசியம். படிப்புக்கும் அவ்வாறே. இல்லாவிட்டால்......" என்று தொடங்கினேஞே பெற்றேர்கள் 'கப்சிப்' ஆகிவிடுவார்கள். "பொடியன் சொல்லுவதும் சரிதான். அவனுக்கு எவ்வளவு ஆராய்ச்சி மனப்பான்மையுள்ள புத்தி" என்று தங்களுக்குள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

**திரு விளேயாடல்.**

விளேயாட்டுப் பாடமும் எனக்குப் பிடிக்காத பாடங்களில் ஒன்று. 'தேவையின்றி அனுவசியமாக எதற்காகக் கையைக் காலே ஆட்டி எமது சக்தியை வீணுக்குவான், ஆடைகளே அழுக்காக்குவான்' என்பது எனது கொள்கை. ஆனுல் இதை விளேயாட்டுப்பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. எனவே, எனக்குத் தோன்றிய ஒரே வழியும் ஒப்பற்ற வழியுமான வெறுங்காலில் மஞ்சள் தண்ணீர் நனைத்த பஞ்சு வைத்து 'பாண்டேச்' துணி சுற்றிக் கட்டும் வழியைக் கடைப்பிடித்து, விளையாட்டுப் பாடங்களுக்குக் கள்ளம் செய்வேன். ஒரு நாள் என்ன மாதிரியோ தெரியவில்லை உண்மையை அறிந்துவிட்ட விளையாட்டுப்பாட ஆசிரியர், கட்டை அவிழ்த்துக் காட்டச் சொல்லிவிட்டார். இதன்பிறகு இந்தத் திருவிளையாட்டை நடத்த நான் துணிந்ததில்லை.

வருடாந்த விளையாட்டுப் போட்டிகளிலும் நான் பங்குபற்றுவதில்லை. அப்படிப் பங்குபற்றி ஓடினாலும்— அது 'சிலோ றேஸ்' என்று எண்ணுமலேகூட ஓடினாலும், கடைசியாகத்தான் வருவேன். ஆனால் பாண் சாப்பிடும் ஓட்டத்தில் மட்டும் நான் கட்டாயம் கலந்து கொள்வது மட்டுமல்லாது அதில் முதலாவதாகவும் நான்தான் வருவதுண்டு,

**அடிக்கடி இறந்த**
**ஆச்சி அப்பு.**

இப்படியே படிக்காமல் பள்ளிக்கூடத்தில் காலம் தள்ளுவதென்றால் கொஞ்சம் வில்லங்கம்தானே! இதற்காக இடையிடையும் ஆசிரியர் மறந்துவிடுவார்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காரணத்தால் பலதடவைகளும்கூட 'அப்பு இறந்துவிட்டார்' 'ஆச்சி மாண்டுவிட்டார்' 'அண்ணனுக்குத் திருமணம்' 'அக்காவுக்குக் கலியாணம்' என்றெல்லாம் பள்ளிக்கூடத்துக்கு லீவுக் கடிதங்களும் எழுதவேண்டி வந்தது. இதெல்லாம் பொய்க் கடிதங்களே! உண்மையில் இவைகளெல்லாம் நடந்தது எனது பள்ளி வாழ்க்கை பூரணமாகக் கழிந்த பின்னரே என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாளில் ஒரு பாடம் இரண்டு பாடங்களுக்கு வகை தெரியாவிட்டால் தலை வலிக்கிறதென்று மேசையில் தலை வைத்துப் படுத்துவிடுவேன் (தலைவலி இருக்கிறதா இல்லையா என்பதை எந்த ஆசிரியரும் கண்டு பிடிக்க முடியாதென்பதை நினைவில் வைத்திருக்கவும்.) இப்படி நான் அடிக்கடி தலைவலியென்று படுப்பதால் பல ஆசிரியர்கள் என்மீது மிகவும் அநுதாபப் படுவதுண்டு. 'இந்த வயதிலேயே பாவம் பெடியனுக்கு 'பிறெசர்' குணம் வந்துவிட்டதே' என்று அவர்கள் மிகவும் கவலைப்படுவார்கள்.

பரீட்சை நெருங்கினால்கூடப் படிப்புக் கிடையாது. பரீட்சைக்கு வேண்டிய இடுக்கிகள் (கிளிப்) மடக்கிகள் (பைல்) தேடுவதிலும், பென்சில் பேப்பர் அடிமட்டம் பேனைகள் வாங்குவதிலும், பென்சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகத் தீட்டுவது, பேப்பரில் அழகாகக் கோடு கிழிப்பது, பேனைகளை கழுவி மை நிரப்புவது போன்ற வேலைகளிலுமாக இருப்பேன்.

**கடவுளை**

**நம்பினோர் ...**

இப்படியெல்லாம் இருந்தும்கூட பரீட்சையில் அரும்பொட்டாக என்றாலும் சித்தியடைந்தேன் என்றால், அதற்கு நான் அல்ல காரணம். அந்த மருதடிப் பிள்ளையாருக்கு பரீட்சைக்கு முன்பும் பரீட்சையின் போதும் அடித்த தேங்காய்களும் கொழுத்திய கற்பூரங்களும் கும்பிட்ட கும்பிடுதல்களும் வீண்போகவில்லை என்றுதான் பொருள். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' அல்லவா? ஆனால் இந்தக் கடவுளுக்கேகூடத் தெரியாது போலும் நான் பின்பு இவரையே திட்ட இருக்கிறேன் என்ற சங்கதி!

**துப்பறியும்**

**ஆர்வம்.**

எஸ். எஸ். சி. வகுப்புக்குள் நுழைந்ததும் பழைய சுத்தம் துப்புரவு எல்லாம் வீண் வேலை என்ற ஞானோதயம் எனக்குப் பிறந்தது. அதற்குச் செலவு செய்யும் நேரத்திலெல்லாம் ஏதாவது துப்பறியும் நாவல்களையாவது வாசித்தால் வருங்காலத்தில் போலீஸ் இலாகாவில் புகுந்து துப்பறியும் தொழிலாவது பார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம் என்ற 'பிசினஸ்' மூளை எனக்கு வந்தது. இதன் பயன், அந்த ஆண்டு நடந்த எஸ். எஸ். சி. பரீட்சைக்கும் நான் அனுப்பப்படவில்லை. 'துப்பறியும் தொழில் தான் உமக்கு இலாயக்கு' என்று சொல்லாமல் சொல்லி விட்டது எஸ். எஸ். சி. பரீட்சைக்கு அனுப்புவதற்காக நடத்தப்பட்ட தகுதிப் பரீட்சை!

**வயது வந்தவர்களுக்கு மட்டும்.**

ஒரே வகுப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்டுகள் படிக்க நேர்ந்தாலும் வயது அதிகமாகச் சென்று விட்டாலும் 'ஏ' பிரிவுக்கு அனுப்பப்படுவது அக்கால வழக்கம். அதன்படி நான் எஸ். எஸ். சி. 'ஏ' வகுப்புக்குச் சென்றேன். 'ஏ' வகுப்பு மாணவர்களுக்குச் சற்று அதிகமான சுதந்திரம் உண்டு. அதிலும் எஸ். எஸ். சி. 'ஏ' வகுப்பு மாணவர்களுக்கோ மிக மிக அதிகமான சுதந்திரம் உண்டு. தலைக்கு மிஞ்சிய பிள்ளைகளும் இருப்பதால் ஆசிரியர்கள் எமக்கு எதையும் வற்புறுத்தவும் மாட்டார்கள். எம்மைத் தண்டிக்கவும் மாட்டார்கள்.

**தினசரி இரண்டு முப்பது!**

இந்த வகுப்பிலேதான் சினிமா என்பது வாழ்க்கைக்கு மிக மிக அவசியம் என்றும், சினிமா பார்க்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவன் வாழ்வு 'விடியப் பனிபோல் கெடும்' என்றும், எவ்வளவு அதிகமதிகமாகச் சினிமா பார்க்கிருேமோ அவ்வளவு அதிகமதிகமாக அறிவு வளரும் என்றும் உணரலானேன். இதை உணர்ந்த சில தியேட்டர் முதலாளிமார்களும் தினசரி இரண்டு முப்பது காட்சி களை ஆரம்பித்தனர். பள்ளிக்கூடத்தில் கட்டுப்பாடு கிடையாது. வீட்டிலோ 'பொடியன் பள்ளிக்கூடத்தில்' என்று நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனல் நானே தியேட்டருக்குள் இருப்பேன்.

காலை வகுப்பிலும் படம் பார்க்கப் படம் இல்லாத காலத்திலுள்ள மாலை வகுப்பிலும் நான் சினிமா நட்சத் திரங்களின் வாழ்க்கை வரலாறுகளை ஆராய்வதிலும், திரைக்கதை வசனம் வாசிப்பதிலும், சிவாஜி எம். ஜி. ஆரில் யார் சிறந்த நடிகர்? பத்மினி பானுமதியில் யார் சிறந்த நடிகை? தங்கவேலு சந்திரபாபுவில் யார் சிறந்த நகைச்சுவை நடிகர்? வீரப்பா நம்பியாரில் யார் சிறந்த வில்லன்? போன்ற விவாதங்களில் ஏனைய மாணவர் களுடன் ஈடுபடுவதிலுமாக இருப்பேன். இந்தச் சங்கதிகள் ஒரு பக்கத்தில் நடைபெற்றுக்கொண்டிருக் கும். ஆனல் பாடங்களும் நடந்துகொண்டுதான் இருக் கும். அதையும் சில துரோகக் கூட்டங்கள் (இது நான் அப்பொழுது சில புத்தகப் பூச்சிகளுக்கு வைத்த பட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்துக்கொண்டுதான் இருக்கும். சினிமா மோகம் என்னை அகோரமாகப் பற்றிக்கொண்டதும் துப்பறியும் தொழிலில் எனக்கிருந்த ஆசை சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது.

**இனித் தெய்வமே!**

அந்த ஆண்டு நடைபெற்ற தெரிவும் பரீட்சையில் ஏதோ ஒரு விதமாகத் தேறியதும்தான் நான் ஏதோ சிறிது படிக்க எண்ணினேன், அதுவரை எழுதாமல் இருந்த பாடக்குறிப்புகளை சக மாணவர்களது கொப்பிகளை வாங்கிப் பார்த்தெழுத ஆரம்பித்தால்......? பரீட்சை தொடங்கியதும்கூட குறிப்புகளைப் பார்த்தெழுதும் வேலை முடியவில்லை. எழுதவேண்டிய குறிப்புகளே மலைபோல் குவிந்திருக்கும்போது அதைப் படிக்கவும் வேண்டுமானால் எப்படி முடியும்? "என் செயலால் ஆவதொன்றுமில்லை இனித் தெய்வமே..." என்ற பாடலைப் பாடியவாறே பரீட்சைக்குப் போனேன். பாடியவாறே பரீட்சையும் எழுதினேன். ஆனால் முடிவு என்னவோ தோல்விதான். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்துக்கு அளவேயில்லை. "கடவுளாவது மண்ணாங்கட்டியாவது! கடவுள் என்பதே கிடையாது! அப்படி இருந்தாலும் அவருக்குக் கண்ணுமில்லை, காதுமில்லை, கையுமில்லை, காலுமில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்குமில்லை, முழியுமில்லை'' என்று திட்டத் தொடங்கினேன்.

"தேருவிட்டால் என்ன குடியா முழுகிப் போய் விடும். 'பாஸ்' பண்ணினால் மட்டும் அரசாங்கம் உடனே வேலை தந்துவிடவா போகிறது? கவலைப்படுவதற்கு இதிலே என்ன இருக்கிறது?" என்ற பெற்ரோர்களது ஆறுதல் வார்த்தையைப் பக்கத் துணையாகவைத்து மீண்டும் அதே வகுப்பில் அதே பிரிவில் பழைய கதையைத் தொடர்ந்தேன். தகுதிப் பரீட்சையில் தேறி கடைசிப் பரீட்சையும் எழுதினேன்.

1958 ம் ஆண்டு சித்திரை மாதம் கடவுள் கருணையினால் (ஆம் மீண்டும் கடவுள் நம்பிக்கை வந்துவிட்டது) எனது விடைத்தாள்களைப் புதிதாகத் திருமணம் செய்து மனைவியோடு மகிழ்ச்சியோடிருந்த ஒருவர் பார்த்தோ என்னவோ (இல்லாவிட்டால் எப்படி முடியும்?) 'தேறிவிட்டேன்' என்ற செய்தி வந்தது. இத்துடன் எனது பாடசாலை- படிப்பு ஆகிய கதையும் மங்களகரமாக முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வீரகேசரி' மூலம் 1961ல் எழுத்துலகில் நுழைந்த நகைச்சுவை எழுத்தாளர் திரு. பொ. சண்முகநாதன் அவர்



கள் ஏனைய ஈழத்துப் பத்திரிகைகளான 'ஈழநாடு', 'கலைச் செல்வி', 'கலைவாணி', 'சங்கப்பலகை', 'சுதந்திரன்', 'செய்தி', 'தமிழ்முரசு', 'தினகரன்', 'புதினம்' 'விடுதலைப் பரணி', 'விவேகி', 'ராதா' ஆகியவைகளிலும் எழுதியுள்ளார். இவர் நகைச் சுவைக் கட்டுரைகள் மட்டுமன்றிப் பல சிறுகதைகள், அரசியற் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், குட்டிக் கதைகள் முதலியனவும் எழுதியுள்ளார். இவரது இரண்டு நாடகங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. எழுதத் தொடங்கிய மிகக் குறுகிய காலத்திலேயே இவர் எழுத்தாளர் மத்தியில் நிலையான ஓர் இடத்தைப் பெற்று விளங்குவதற்கு, இவர் தனது எழுத்தில் கையாண்டுவரும் 'நகைச் சுவை'யே காரணமாகும்; இந்த எழுத்தாளர் எழுதியுள்ள ஐம்பதுக்கும் அதிகமான நகைச்சுவைக் கட்டுரைகளிலிருந்து எடுத்துத் தொகுத்த பதினாறு கட்டுரைகளே இக் கொழும்புப் பெண்.

இன உணர்ச்சியும் தமிழுணர்ச்சியும் நிறைந்த இந்த இளைஞர் சங்குவேலியைச் சேர்ந்தவர். சங்குவேலி சைவ வித்தியாசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன். எஸ். எஸ். சி. வரை படித்துத் தேறியிருக்கிறார். எவரும் பழகுவதற்கேற்ற இனிய பண்புகள் நிறைந்தவர்.

'செல்வா'வின் அரசியலிலும், 'மு. வ.'வின் எழுத்திலும் அதிக ஈடுபாடு கொண்டுள்ள சண்முகநாதன் அவர்கள் திரு. சி. என். அண்ணாத்துரையையும் 'அறிஞர் அண்ணா'வாக மதிப்பவர்.

— கலைச் செல்வி

சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் அட்டை அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org